குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க ஆண்டு ஆவணித்திங்கள் 10—9—67 [இதழ் 1



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ காசி துண்டிராஜ கணபதியை வழிபடுதல்

590
537
537
67

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

போம் சிவபோகம்
ணமாய் எங்கும்
வசப்போம் உலகில்
வசியோம்—முசிப்பின்றி
வாழ்வோஞ் சிவத்தையுணர்
மாதவர்தம் பொன்னடிக்கீழ்த்
தாழ்வோம் எமக்கார்
சரி. (56)

ஆசிரியர் :-

வித்துவான்,

சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 | 10–9–67 | இதழ் 10

உட்பொருள்

எண்		பக்கம்
1	கருணை விளையாட்டு	... 537
2	சமயாசாரியர்	... 543
3	மாயூரம்-வள்ளலார்கோயிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை வரவேற்பிதழ்கள்	... 553
4	வீரத்திற்கோர் விசயன்	556
5	திருத்தொண்டர் வரலாறு	... 564
6	சூரியன்	... 567
7	பனையும் பயனும்	... 571
8	திருப்பணியே அறப்பணி	... 574
9	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆசியுரை	... 576
10	சித்தாந்த வினாவிடை	... 579
11	செய்திகள்	... 586
12	எதிர்காலம்	... 590
13	Extract from the Visitor's Book	... 566, 589

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க - ஆவணி - 10—9—67 [இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

கருணை விளையாட்டு

இறைவன் பெருங்கருணை படைத்தவன்; அருளாளன்; உயிர்களைக் காக்கும் வள்ளல். அவனது ஆட்சியில் கருணையே உண்டு. எவ்வகைப்பட்ட பாவங்கள் புரிந்த போதிலும், அவ்வுயிர்களை மன்னிக்க அவன் காத்திருக்கிறான். தன்னுடைய திருவருள் வெளிக்குளே அகிலாண்டகோடிகளை யெல்லாம் தங்கும்படிக்கு இச்சை வைத்த தயாபரன் அவன். அவனுடைய எல்லையற்ற பெருங்கருணையை — தனிப்பெருங் கருணையைக் ‘கரையிலாக் கருணை’ எனச் சிறப்பித்து, ‘அதன் கடல் அவன்’ என்று இசைக்கின்றது

திருவிசைப்பா. அயராத அந்தக் கருணையினால் அவன் புரியும் விளையாடல்களும் பல. அவற்றை, 'அலகிலா விளையாட்டு' என்று பாராட்டி மகிழ்வர் சான்றோர். இவ்வுலகங்களைப் படைத்ததே ஒரு விளையாட்டு; காப்பதுவோ எனில் அதுவும் அவ்விளையாட்டில் ஓர் அங்கமே; இறுதியில் அழிப்பதுவோ, அந்நாடக விளையாட்டில் ஒரு பகுதியே. 'காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' என்று மாணிக்க வாசகர் திருவாய்மலர்கின்றார்.

மதுரையிலே பெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அத்தனையும் இந்தக் கருணையின் விளைவே. திருமேனி கொண்டு மண்ணுலகிலே போந்து, மானிடர் காணப் பிட்டுண்டும், பிரம்படி பட்டும், விறகு சுமந்தும், பன்றிக்குட்டிகளுக்குத் தாயாய் வந்தும் அவன் புரிந்த விளையாடல்களை எண்ணினால் அக்கருணையின் உறுதி நமக்கு விளங்கும். அவன் அவ்வாறு கொண்ட திருவுருவங்கள், சிவஞான சித்தியாரிற் சொல்லப்படுவது போன்று, 'நந்தம் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு' என்றே கூறத்தக்கவை.

பெற்ற தாய், குழந்தையர் படும் துயரம் பொறுக்கமாட்டாள்; எப்படியாவது சேயர் துயரத்தைப் போக்க முற்படுவாள். 'செய்த வினைக்கு ஈடாக இந்த உடம்பைக் கொடுத்தாலும், இந்த உடம்பின் துயரத்தை, இதனுள்ளிருந்து உழலும் உயிரின் துன்பத்தைத் துடைக்க, ஓடி வருவான் சோக்கநாதன்; இத் துயரம் தரியான் அவன்' என்பது ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவுள்ளம்.

> *" தாயர் மகவருத்தம் சற்றும் தரியார்கள்*
> *ஆயவினைக் கீடா அமைத்தாலும் — காயம்*
> *பரிக்கும் துயரமெல்லாம் பார்க்கஉனக் கென்றும்*
> *தரிக்குமோ சொக்கநா தா "*

என்பது அத் திருப்பாட்டு. இதனுள் தாயனைய அன்புடைய தண்ணளியான் இறைவன் என்று காட்டுகின்றது அச் சான்றோர் திருவுள்ளம். இதனாலன்றோ தாயையிழந்த

பன்றிகளுக்கு, அவற்றின் தாயாய்ப் போந்து, பாலூட்டி வளர்த்தான் பரம்பொருள். இதனினும் அப்பெருங்கருணைக்கு வேறு சான்றும் வேண்டுமோ ?

" — தாயாய்
அலைகொடுத்த கேழல் அருங்குழவிக் கன்று
முலைகொடுத்தாய் நீயலவோ முன் ?"

என்று கேட்கின்றது சொக்கநாத வெண்பா. அதனால் 'நீ யார்' என்று கேட்பதுடன், என் நோயைத் தீர்த்தல் உன் கடனன்றோ என்று தெளிவுபடுத்துகின்றது இவ்வருட் கவிதையின் முற்பாதி.

" நோயால் வருந்தியுனை நூறுகுரல் கூப்பிட்டால்
நீயார் எனுதிருக்கை நீதியோ"

சொக்கநாதனின் திருவடித் தாமரைகளைத் தொழுது தொழுது தழும்பேறிய நெஞ்சிலிருந்து போந்த சுடர் ஓவியம் இது. அப்பெருமானை வாழ்த்தி, வாழ்த்தி நாத்தழும்பேறிய நல்ல திருவாய் மலர்த்தும் சொற்கள் இவை. ஆதலின் பெருமானின் பெருங்கருணைக்கு விண்ணப்பம் செய்யும் இவ்வியத்தகு பாட்டு, பொருள் பொதிந்ததாக, மனத்துட் பதிவதாக உள்ளது. இழிந்த பன்றிப் பிறப்பாகவும் பெருமான் வருகின்றான். எதனால்? அளவிறந்த கருணையால். அங்கே பிறப்புப் பற்றிய எண்ணம் இல்லை. அதுமட்டுமோ? நினைத்திருந்தால் அப்பன்றிக் குட்டிகளின் பசிபோக்க அவனால் இயலாதோ? இருந்த இடத்திலிருந்தே அனைத்தையும் இயற்றும் பரம்பொருளுக்கு இச் சிறு செயல் நிகழ்த்தக் கூடாததோ? எல்லாம் வல்ல அவனுக்கு இஃது எம்மாத்திரம்? இருப்பினும் ஏன் தானே தாய்ப் பன்றியாக வருகின்றான்? அதனில் உள்ள ஆழ்பொருளை நோக்குதல் கடன். பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்பது சீரியோர் நெறி அன்றோ!

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்பதன்றோ வள்ளுவம்? ஆதலின் எல்லாம் ஆகிய அவ னுக்கு, இதிற பேதம் இல்லை. உலகம் இதனை - இவ்வுண் மையை உணர்தல் வேண்டும் என்பதே திருவுள்ளம். கருணைக்கு இனம் இல்லை; சாதி இல்லை; உயர்வு இல்லை; தாழ்வு இல்லை; உயர்திணை அஃறிணை என்ற திணைப்பாகு பாடோ, ஆண் பெண் என்ற பால் பாகுபாடோ, எதுவும் இல்லை. அது பெருமழை. 'மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ' என்ற வாக்கினை எண்ணினால் இது நன்கு விளங்குவதாகும்.

அக் கருணை மழை யாண்டும், யாவர்க்கும் பொது. 'கைம்மாறு வேண்டாக் கடப்பாடு, மாரிமாட்டு, என்னாற்றும் கொல்லோ உலகு' என்றன்றோ தமிழ்மறை வினவுகின்றது. அப்படிப்பிணையை உலகம் உணரவே இவ்விளையாட்டை அவ்வித்தகன் விளக்கினராதல் வேண்டும்.

இன்பத்துன்ப உணர்ச்சிகள் பொது; ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிர்வரை இறைவனது அருட்படைப்பில் இவ் வுணர்ச்சிகளைக் கொண்டு விளங்குகின்றன:

> *"எல்லாவுயிர்க்கும் இன்பம் என்பது*
> *தானமர்ந்து வரூஉ மேவற் றாகும்"*

என்று தொல்காப்பியர் கூறுவது இரண்டிற்கும் பொதுப் பட்டதே எனலாம். பிறவுயிர்களின் துன்பத்தைக் கண்டு மனங்கசிகின்ற திறம் மனிதர்க்கு வேண்டும். நாட்டு மக்கள் பனிக் காய்ச்சலால் வாடியபோதும், உணவின்றிப் பஞ்சத் தால் அல்லலுற்றபோதும், கொடுவிடம் தீண்டிக் குழறிய போதும், இறைவன் திருவடிகளையே நினைந்து, அவனடித் தாமரைகளிலேயே ஆழ்ந்திருந்த சமயப் பெரியோர் வாளா விருந்தாரில்லை; தாமும் கசிந்து இறையருளை நாடினர்; அத்துன்பம் நீக்கி இன்பம் விளைவித்தனர் என்று விளக்கு கின்றது பெரியபுராணம். தம்முணர்வில் நில்லாது, இறை வடிவாக நின்று அவ்வருளற்புதச் செயல்களைச் செய்தனர் அச்சான்றோர்.

இறைவன் திருவிளையாடல்கள் ஒவ்வொன்றும் இவ்வாறு துன்பம் துடைத்து இன்பம் பெருக்கும் ஏற்றம் உடையவையே; அவற்றுள் பிறிதொன்றே அவன் பிட்டுண்டு பிரம்படிபட்ட ஆவணி மூல அருளாடல். மணிவாசகர் வெயிலில் வையையாற்று மணலில் நின்று வாடியபோது அவன் கருணை மலர்ந்தது; வெள்ளமாகப் பெருகிற்று. 'தாயர் மகவருத்தம் சற்றும் தரியார்கள்' என்று குருஞான சம்பந்தர் பாடுவது போன்று, தன் அருள் மகன் வெயிலில் துடிக்க மனம் பொறுப்பானு இறைவன்? தண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கி மணிவாசகரின் கண்ணீர் வெள்ளத்தைத் தடுத்தான். 'எல்லாம் உனது பதம் எல்லாம் உனது செயல், எல்லாம் உனதருளே என்றிருந்தால், பொல்லாத, மாதுயரம் நீங்கும்' என்று குருஞானசம்பந்தர் கூறும் விளக்கம் இங்கே அற்புதமாக நிகழக் காண்கின்றோம். மணிவாசகர் 'தம் செயல் அற்று, தாம் அற்று' எல்லாம் 'நாதன் தன் செயல்' என்ற உறுதியில் நிலைத்தார். ஆதலால் அங்கே காக்க வேண்டிய பொறுப்பு கண்ணுதலான் தலைமேல் விழுந்தது. அத்தலையில் மண்ணும் சுமக்க நேர்ந்தது என்பது உணரத்தக்க உண்மையாகும்.

இத்திருவிளையாட்டில் தொடர்புடையவள் மற்றொருத்தியும் ஆவள். அவள் முதுமைப் பருவத்துப் பெண்ணடியாள். எளியவாழ்வினள்; ஆயினும் இதயத்தைச் சிவபிராற்கே ஆக்கிய அன்புடையாள். பிட்டுவிற்றுண்டு வாழும் பெரு நிலையினள். 'அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னை' அவள் தரும்பிட்டுப் பிட்டுண்பதற்காகவே, அவள் தலையன்பிற் கட்டுண்டு மண்சுமந்து கூலியாளாய் மாறினன் மதுரைப்பிரான். எளியவர்க்கும் வலியவர்க்கும் ஏற்ற துணையாகி அவ்வவர் நிலைகளில் நிற்பான் பரம்பொருள் ஒருவனே யன்றோ? உலகில் திக்கற்றவர்க்குத் துணை செய்யத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும் என்ற உண்மையை உணர இவ்வரலாறு உறுதுணை நிற்கின்றது. ஆயிரம் பிறைகண்ட அவ்வருந்தவத்து மூதாட்டிக்காக, ஆயிரம் தாமரைபோலும் ஆயிரம் சேவடியான் தன் பொன்னடி நோவப் புதுத்தொழில் செய்தான். அங்கே இக்

கருணையில் பிறிதொரு நுட்பமும் தோற்றினன். கூலி யைப் பெற்றுக்கொண்ட பின்னரே மண் சுமக்கலானன் மாதேவன் : சுமந்தவனுவது ஒழுங்காகக் கடனாற்றினனு எனில் அதுவும் இல்லை. எல்லார் பங்கும் அடைபட்டது; வந்தியின் பங்குக்கு வந்தவன் வம்பினால் அதுமட்டுமே எஞ்சியது ; எஞ்சிய பங்குக்கும் இடர்விளைத்தது எனக் காட்டுகின்றான். 'கடமையைச் செய்தபின்னரே கூலிபெற - உரிமை கோர வேண்டும். இல்லையேல் ஒறுத்தலுக்கே உள்ளாக நேரும்' என்பதே இப்படிப்பினை. இதனை உலகு உணருமா ? உணர்ந்து நெறிநிற்பின் போராட்டங்கள் நிகழுமா ? அன்புநெறி யன்றோ பெருகும் ! அதுவன்றோ உலக நல்வாழ்விற்கும் சமுதாயப் பேரின்பத்திற்கும் அடிப் படையாகும்.

" பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத் தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டக் கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் "

என்பது ஆளுடைய நம்பிகளாகிய மணிவாசகர் இந்நிகழ்ச் சியை மனங்கனிந்து எண்ணிப் பாடுகின்ற இனிய பாடல் ஆகும்.

ஆண்டுதோறும் ஆவணி மூலத் திருநாள் வருகின்றது; அந்நாளில் அவனது கருணை விளையாட்டை எண்ணி வாழ்வை நெறிப்படுத்துவது நம கடன் ஆகும். அனைத்தை யும் இயக்கும் அருமபொருள் காலந்தோறும் தன் கருணை யால் நிகழ்த்தவரும செயல்கள் பல. அவற்றுள் நல்லன உய்த்துணர்ந்து வாழ்வைச் செம்மைப் படுத்திக் கொள்ளல் வேண்டும. இறைவன் நிகழ்த்திய அருளாடல்கள் பலவும் இவ்வடிப்படையை யுணர்த்துவனவே அவற்றுள் ஏதேனும் மறத்திற்குத் தொடர்புடையன போலத் தோன்றின், அது நமமக 'கொல்ல அல்ல; கொலலாக் குணம் போக்க' என்ற உணர்வு என்றும இருத்தல் வேண்டும்.

உ
குருபாதம்

சமயாசாரியர்

குருவருள்

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தான்எங்கே
எந்தைபிரான் அஞ்செழுத்தெங் கே.

மக்கள் வாழ்க்கையில் முதல் இடம் பெறுதற்கு உரியது சமயம். ஏனெனில், மற்றவை யாவும் நிலையில்லாது அழியும் உடலின் நலத்தைப் பற்றியவை. சமயம், என்றும் அழியாது நிற்கும் உயிரின் நலத்தைப் பற்றியது. இத்தகைய சமயத் துறையில் நுணுக்கமான பல பொருள்களை ஆய்ந்து தெரிவிக்கும் அருங்கலைகள் பலவற்றையும், அக்கலைகளின் பொருளை அனுபவத்திற் கண்டு பயன் பெற்ற அனுபூதிமான்கள் பலரையும் கொண்டு விளங்கும் சிறப்பைப் பெற்றது நம் பரதகண்டம் ஒன்றே. இச் சிறப்பியல்பே, '**வேதாகம வழக்கம்**' என உயர்த்துக் கூறப்படுகின்றது. சமய உணர்வு, பொதுவகையில் உலகெங்கும் பரவி விளங்கியபோதிலும், அஃது இங்ஙனம் சிறந்த வகையில் விளக்கம் பெற்றுத் திகழ்வது நமது பரத கண்டம் ஒன்றிலேதான்.

உலகில் உள்ள மக்கள் யாவரும் ஒருநிறத்தினரல்லரா தலின், எத்துறையிலும் அவர்களிடையே கருத்து வேறுபாடு இருத்தல் தவிர்க்க முடியாதது. அங்ஙனமே சமயத் துறையிலும் இருத்தல் இயற்கையாகின்றது. ஆயினும், அவ்வேறு பாடு, 'அகவேறுபாடு, புறவேறுபாடு' என இருவகையாய் அமையும். அகவேறுபாடாவது, அடிநிலையில் மாறுபடாமல், பிறவற்றில் சிறிது சிறிது கருத்து வேறுபடுதல். புறவேறு பாடாவது அடிநிலையிலேயே வேறுபடுதல். இந்நிலையில், உயர்ந்தோர் பலராலும் தொன்றுதொட்டுக் கைக்கொள்ளப் பட்டுவரும் வேதாகம வழக்கத்தின் அடிநிலை மாறுபடாமல்,

பிறவற்றில் சில பல வேறுபாடுடைய சமயங்கள், 'வைதிக சமயம்' அல்லது, 'வேத மதங்கள்' எனப்படும். அவ்வாறின்றி அதன் அடிநிலையிலே மாறுபட்டு முற்றிலும் வேறுபட்டு நிற்கும் சமயங்கள், 'அவைதிகசமயம்' அல்லது, 'புறமதங்கள்' எனப்படும். இப் புறமதங்களால், தொன்றுதொட்டு வந்த உயர்நெறியாகிய வைதிக நெறிக்குத் தமிழகத்தில் ஒருகாலத்தில் பேரழிவு நேர்ந்தது. அஃதாவது, களப்பிரரும், பல்லவரும் ஆகிய புறமதத்து அரசர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய பொழுது வைதிக நெறியை இங்கு அறவே அழித்தொழிக்க முயன்றனர். அவருள் பின்வந்த பல்லவர்கள் தங்கள் மதத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் வழிசெய்து, மக்கள் மதமாய் இருந்த வைதிக நெறியின் வளர்ச்சிக்கு யாதும் செய்யாது விடுக்கும் முறையால் வைதிக நெறிக்குக் கேடு சூழ்வதில் பெரிதும் வெற்றி கண்டனர்.

பல்லவர்களது வெற்றித்திறத்தால் சோழர்கள் இருந்தவிடம் தெரியாது அடங்கி ஒடுங்கினர். பாண்டியர் பல்லவர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்கள் ஆட்சியைச் செலுத்தினர். சேரர்கள் நடுநிலைமையில் இருந்தனர். எனவே, பாண்டிநாடு, சோழநாடு, நடுநாடு, தொண்டைநாடு என்னும் இடங்களில் வேதாகம வழக்கம் அறவே மறைந்தொழிந்தது. சேரநாட்டிலும் அது செழித்து வளர்தற்கு வழியில்லாது போயிற்று. எனவே, வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழகத்தில் எங்கும் புறமதமே தழைத்தோங்க, வைதிக நெறிக்கே இடம் இல்லையாயிற்று. அதனால், 'இப் பெரியதோர் அழிவு நிலையை மாற்ற இனி ஆண்டவனே உருவெடுத்து வந்தாலொழிய, மக்களால் இயலாது' என்னும் நிலை, வேதாகம வழக்கில் நின்று ஆங்காங்கிருந்த ஒரு சிலரது உள்ளங்களில் நன்கு வேர் ஊன்றி விட்டது. ஆகவே, அந்நிலையை மாற்றுதற்குரிய மனித முயற்சியும் அடியோடு கைவிடப்பட்டது. இந்நிலையில் வடதமிழ் நாட்டிலும், தென்தமிழ் நாட்டிலும் இரு பெரியார் ஒருங்கே தோன்றிப் போர் இன்றிப், புரட்சியின்றித் தங்கள் தண்ணிய அருள்வாக்குக்களாலும், அருள் தொண்டுகளாலுமே அரசர்களையும் மனம் மாறச் செய்து வைதிக சமயத்தவராக்கி, நாட்டிலும் புறச்சமயத்தின் வாடையே இல்லாதபடி போக்கி வைதிக நெறியைத் தழைத்தோங்கச் செய்தனர் என்றால், அவர்கள், ஆண்டவனது அருளால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட அவ

தார புருடர்களாவதல்லது, வேறு யாராய் இருக்க முடியும்? அவ்விரு பெரியார் யாவர்? அப்பரும், சம்பந்தரும் என்னும் அவர்களே அவ்விரு பெரியார்.

அவர்களில் அப்பர் வடதமிழ்நாட்டில் திருவாமூரில் சைவ வேளாளர் குடியில் அவதரித்து, மருணீக்கியார் என்னும் பெயரோடு வளர்ந்து அரிய கல்வியைக் கற்று, இளமை முதலே ஆன்மலாபத்தை அடைவதில் விருப்பம் உடையவராய், உலக வாழ்க்கையில் செல்லாமல், தமக்கிருந்த பொருள்களையெல்லாம், காவளர்த்தல், குளம் தொடுதல், கற்றவர்க்குப் பரிசளித்தல், ஏழைகட்கு அவர் வேண்டுவன ஈந்து இன்னல் களைதல் என்னும் இவ்வகையிலே செலவிட்டார். அவற்றால் எல்லாம் அவர் மன அமைதி பெறாமல் சமய நூல்களை ஆராய்ந்து உண்மைகாண வேண்டும் என்று அவற்றை ஆராயத் தொடங்கினார். அவ்வாராய்ச்சியில் அன்று நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த சமண சமயமே மெய்ச் சமயம் என அவருக்குத் தோன்றிற்று. அதற்குக் காரணமும் இறைவனது திருவருளே என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், அன்று அவர் சமண சமயமே மெய்ச் சமயம் எனக்கொண்டு அதன்கண் புகாதிருந்திருப்பாராயின், அச்சமயத்தில் பேரார்வம் கொண்டிருந்த பல்லவ மன்னனைப் பின்னர் அத்துணை எளிதில் திருத்திச் சைவனாகச் செய்து, அவன் ஆட்சிச் சமயம் சமண சமயம் என்பதின்றி, நாடெங்கும் சைவ சமயமேயாகச் செய்திருத்தல் இயலாது.

பல்லவ மன்னன் சமண சமயத்தில் பெரும் பற்றுக்கொண்டிருந்தமையால், அதன் வளர்ச்சிக்கென ஆங்காங்கு சமணக் குருமார்கள் பலர் தங்கி அச்சமயத்தைப் பரப்புதற்கு நிலையங்கள் பல அமைத்து, மானியங்கள் பல விட்டிருந்தான். அந்நிலையங்கள், 'பாழிகள்' என்றும், 'பள்ளிகள்' என்றும் பெயர் பெற்றிருந்தன. அவற்றில் சமணக் குருமார்கள் பலர் தங்கி இனிதே இருந்து தங்கள் சமய வளர்ச்சிக்குப் பெரிதும் ஆக்கம் தேடினர். இந்நிலை, தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடு என்னும் இடங்களில் பல்லவனால் நேரே உண்டாக்கப்பட்டது. பாண்டியநாட்டிலும் இதேநிலைதான் இருந்தது. அதற்குக் காரணம், பல்லவனுக்கு அடங்கி வாழ்ந்த பாண்டியன் தானும் சமணனாக மாறி அச்சமயத்தை வளர்ப்பதில் ஆர்வம் காட்டியதேயாகும்.

இவைகளில் திருப்பாதிரிப்புலியூருக்கு அருகே, 'பாடலி புத்திரம்' என்னும் இடத்தில் இருந்த ஒரு சமண் சமயக் குருமார் நிலையத்தில் மருணீக்கியார் சென்று சேர்ந்து, அவர்கள் வழிப்பட்டு நின்று சமண் சமய சாத்திரங்களில் மிக வல்லுந ராகி, சமணக் குருமாரது வேடத்தையும் ஒழுக்கத்தையும் உடையவரானார். தம் இளமைப் பருவத்திலே தம் தந்தை தாயர் விண்ணுலகடைந்த பின் தம்பொருட்டாகவே உயிர் தாங்கியிருந்த தம் தமக்கையார் 'திலகவதியார்' என்பவர் சொல்லிய சொற்கள் மருணீக்கியார் செவியில் ஏறவில்லை. அவர் உளமார ஒன்றை உண்மை எனத் துணிந்துவிட்ட பின்பு மற்றவை அவர் செவியில் எவ்வாறு ஏறும்? ஏறவில்லை. அதனால், பாடலிபுத்திரத்துச் சமணக் குருமாரிடம் சேர்ந்த அவர், பின்பு அவர்களால் போற்றப்படும் தலைவராகிவிட்டார். அங்கிருந்த சமணக் குருமார்கள் அவருக்குத் 'தருமசேனர்' என்னும் பட்டம் கொடுத்துப் போற்றினர். தருமசேனர் சமண் சமயத்தைப் பலருக்கு நன்கு போதித்து வந்ததுடன், அதனை எதிர்த்து வாதம் புரியும் பௌத்த சமயத்தாரையும் வாதில் வென்றார். அதனால், பல்லவ மன்னன் தருமசேனரிடம் பெரிதும் ஆர்வமும், மதிப்பும் உடையவன் ஆனான். இவர் தம் தமக்கையார் ஒன்றும் செய்யமாட்டாதவராய் வருந்தித் தாம் இருந்து தொண்டு செய்து வந்த திருவதிகை வீரட்டானேசுவரரிடம் தம் தம்பியாரை நன்னெறிப்படுத்தியருளவேண்டும் என்று நாள்தோறும் விண்ணப்பித்துவந்தார்.

உரிய காலமும் வந்தது. பாடலிபுத்திரத்துச் சமண் பள்ளியில் இருந்த தருமசேனருக்கு ஒருநாள் திடீரெனத் தாங்கலொண்ணாத பெருஞ் சூலைநோய் வந்து தாக்கியது. அது வந்து பற்றிய பொழுதே தீர்வதாகவும், தீர்ந்து தருமசேனர் பிழைப்பதாகவும் தோன்றவில்லை. சமணக் குருமார்கள் மந்திரம், மருத்துவம் முதலிய பலவற்றில் வல்லவர்கள். அவற்றாலும் அவர்கள் மக்கட்குப் பல நோய்களைத் தீர்த்து மக்களுடைய மதிப்பிற்கு உரியவர்களாய் இருந்தனர். அவர்கள் தருமசேனர்க்குத் தம்மால் ஆன சிகிச்சைகள் பலவற்றைச் செய்தனர். அவர்கள் சிகிச்சை செய்யச் செய்யத் தருமசேனரது சூலை நோய் வளர்ந்ததேயன்றிக் குறையவில்லை. அதனால் அவர்கள் இது தீராநிலையதாய் வந்து பற்றியது; இதனைத் தீர்த்தல் இயலாது என்று தருமசேனருக்கு உண்டாகிய நிலை

மைக்காக மிகவும் கவலைப்பட்டு அவரைக் காப்பாற்றச்செய்யும் முயற்சியைக் கைவிட்டார்கள்.

தருமசேனரும் தமக்கு இறுதிக்காலம் வந்ததாகவே நினைத்துத் தமக்காகவே உயிர் தாங்கி - ஆனால் சைவ சமயத்திலேயே இருக்கின்ற தம் தமக்கையாரைப் பார்க்க விரும்பி, அவருக்கு இரகசியமாக ஓர் ஆள் மூலமாகத் தம் நிலையைத் தெரிவித்தார். திலகவதியார் தம் தம்பியாருக்கு நேர்ந்துள்ள நிலையைக் கேட்டு வருந்தினாராயினும், 'நாம் சமணப் பாழிக்கு வரமாட்டோம்' என்று சொல்லியனுப்பிவிட்டார். தருமசேனர்க்குத் தாமே தம் தமக்கையாரைச் சென்று காணவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று அந்த எண்ணம் உண்டான உடனே சூலை நோய் சிறிது குறையலாயிற்று. பின் அன்று இரவு ஒருவரும் அறியாமல் சமயற்காரனைத் துணையாகப் பற்றிக்கொண்டு சமணக் கோலத்தை நீக்கி வெள்ளாடை உடுத்துக்கொண்டு திருவதிகை நோக்கி நடந்தார். சூலைநோய் திருவதிகைக்கு அவரை அழைக்கவே வந்தது ஆகையால் அஃது அவரது பயணத்திற்கு இடையூறு செய்யவில்லை.

தருமசேனர் மெல்ல மெல்ல நடந்து திருவதிகையை அடைந்தார். பொழுது புலரும் நேரமாய்விட்டது. திலகவதியார் விடியற்காலையில் கோயிலுக்குத் தொண்டு செய்யச் செல்வதற்கு எழுந்தார். தருமசேனர் சென்று அவரைக் கண்டு 'அம்மையீர்' என்று அவர் காலில் விழுந்து, 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று சொல்லி விம்மி விம்மி அழுதார். தமக்கையாரும் தாங்க ஒண்ணாத் துன்பம் உற்று, 'தம்பியீர், மயக்கத்தால் பரசமயப் படுகுழியில் வீழ்ந்து துன்புற்றீர்; உமக்கு வந்த இந்தச் சூலைநோய், இத்திருவதிகை வீரட்டானப் பெருமான் கொடுத்ததே; அவரை வணங்கி அவருக்கு ஆட்படுவீராயின் இஃது அகன்றொழியும்' என்று சொல்லி விபூதியைப் பஞ்சாக்கர மந்திரம் ஓதிக் கொடுத்தார். தம்பியார் வணங்கியேற்று அதனை உடல் முழுதும் நிரம்பப் பூசிக்கொண்டார். அம்மையார் வழக்கம்போலத் தோண்டியும், சாணமும் எடுத்துக்கொண்டு கோயிலுக்குள் தம்பியாரை அழைத்துச் சென்று வீரட்டானேசுரர் திருமுன்பில் விடுத்துத் தம் தொண்டினைச் செய்யச் சென்றார்.

தம்பியாருக்குத் திருவீரட்டானேசுரரைக் கண்ட உடன் அளவிலா ஆர்வம் பெருகிற்று. விழுந்தார்; பணிந்தார்; எழுந்-

தார்; கைகூப்பி நின்ருர்; அந்நிலையில் பாடும் உணர்ச்சி தோன்ற, "கூற்ருயினவாறு" என்னும் திருப்பதிகத்தைப் பாடி ஒவ்வொரு பாடலிலும் சூலை நோயின் கொடுமையைக்கூறி அதனைத் தீர்த்தருளும்படி வேண்டினுர். பதிகம் முடிந்தது; சூலை நோயும் நீங்கிற்று. சிவபெருமான் மகிழ்ச்சியுற்று, 'அரிய திருப்பதிகத்தைப் பாடினமையால், உனக்கு இன்றுமுதல், நாவுக்கரசு என்ற பெயர் வழங்குவதாக' என அசரீரியாக அருளிச்செய்தார். நாவுக்கரசருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. எந்த மணிமந்திர ஔடதங்களாலும் நீங்காத - நீங்காது என முடிவு கட்டி விடப்பட்ட கொடிய சூலை நோய் ஒரு திருப்பதிகத்தால் நீங்கியது கண்ட நாவுக்கரசருக்கு இறைவன் திருவருளே எல்லாம் செய்யவல்லது என்பதற்கு வேறு சான்று வேண்டாவாயிற்று. அதனுல், அவர் இனி நாம் இறைவனுக்கு மனம் மொழி மெய் என்னும் மூன்றினுலும், தொண்டு செய்தல் ஒன்றே செய்யத்தக்கது எனக் கொண்டு, மனத்தால் இறைவனைத் தியானிப்பதும், வாயால் திருப்பதிகம் பாடுவதும், கையால் உழவாரப் பணி செய்வதும் ஆகிய தொண்டுகளை மேற்கொண்டார். ஆனுல் பாடலிபுத்திரத்திலிருந்த சமணக் குருமார்களுக்கு இந்நிகழ்ச்சி கோபத்தையும், வருத்தத்தையும் உண்டாக்கிற்று.

நெடுங்காலமாகச் சமண சாத்திரத்தில் வல்லவராய், அச்சமயத்திற்கு எதிராக வாதம் செய்பவரை எல்லாம் தக்க முறையில் வென்று, அரசனுலும் நன்கு மதிக்கப்பெற்றுத் தருமசேனர் என்னும் பட்டத்துடன் இருந்த சமணமதக் குரு ஒருவர் அச்சமயத்தைவிடச் சிறந்த சமயம் சைவ சமயமே எனக்கொண்டு சைவராகிவிட்டார் என்ருல், சமண சமயத்திற்கு அதைவிடப் பெரிய வீழ்ச்சி உண்டோ? இல்லை. அதனுல், சமணக் குருமார் அவமானம் ஒரு பக்கமும், அரசன் இனி நமக்குக் கொடுத்துள்ள பெருமைகளையும், வசதிகளையும் போக்கிவிடுவான் என்ற கவலை ஒரு பக்கமுமாக அவனிடம் ஒருங்கு சென்று முறையிட்டனர். தருமசேனர் இறுதிக் காலத்தில் தம் தமக்கையிடம் சென்று சேர விரும்பி, தமக்குக் கொடிய சூலைநோய் வந்தது என்றும், அது நமது சமயத்தில் உள்ள மந்திர மருந்துகளால் நீங்கவில்லை என்றும் சொல்லித் திருவதிகை சென்று சைவராகிவிட்டார்; இது நம் சமயத்திற்கு அவர் இழைத்த பெருந்தீங்கு' எனக் கூறினுர்கள். அரசனும் மிக்க சீற்றங்கொண்டு, அவரை

அழைத்துவருமாறு அமைச்சர்க்குக் கட்டளையிட்டான்; அமைச்சர் சென்று அழைத்தபொழுது நாவுக்கரசர், 'நாம் உம் அரசன் ஆணைக்குக் கீழ்ப்படிய வேண்டுவதில்லை' என்று தமக்கு உள்ள இறைவன் திருவருள் துணையை ஒரு திருப்பதிகத்தாற் கூறினார். அமைச்சர்கள், 'நீங்கள் வாராவிடில், அரசன் எங்களைத் தண்டிப்பான்' என்றனர். அதனால் அவர்களிடத்தில் இரக்கங்கொண்டு நாயனார் சென்றார். சமணக் குருமார்கள் அவரை முதலில் நீற்றறையில் இடச் சொன்னார்கள்; பின், நஞ்சூட்டக் கூறினார்கள்; பின் யானைக்காலால் இடறுவிக்கும்படி தெரிவித்தார்கள். அவர்களிடம் பெருமதிப்புக்கொண்டுள்ள அரசன் அவர்கள் கூறியவாறே செய்வித்தான்; ஆனால், நாவுக்கரசர் திருவருளின் துணையால் அவற்றால் எல்லாம் தீங்கின்றியே இருந்தார். கடைசியாகச் சமணர்கள் கல்லில் கட்டிக் கடலில் வீழ்த்தச் சொன்னார்கள். அவ்வாறே செய்விக்கப்பட்டது. ஆனால், நாவுக்கரசர் "சொற்றுணை வேதியன்" என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடிக் கல்லே தெப்பமாக மிதக்கத் திருப்பாதிரிப்புலியூரில் கரையேறினார். கல்லே தெப்பமானதைக்கண்ட மக்கள் இறைவனது திருவருளின் பெருமையை நேரே கண்கூடாகக் கண்டு வியந்தார்கள். நாவுக்கரசர் இறைவன் திருவருளை நிரம்பப்பெற்ற பேரருளாளரானமையை நன்கறிந்து போற்றினர். பல்லவ மன்னனும் உண்மை யுணர்ந்து நாவுக்கரசரிடம் வந்து அவரை வணங்கித் தன்னை மன்னித்தருளும்படி வேண்டி அவரிடம் திருநீறு பெற்றுச் சைவனாயினான். தான் சைவனாயினமைக்கு அறிகுறியாகப் பாடலிபுத்திரத்தில் இருந்த சமணப் பாழியை இடித்துக் கொணர்ந்து திருவதிகைக்கு அருகில் தன் பெயரால் 'குணதர ஈச்சரம்' என்ற ஒரு சிவாலயத்தைக் கட்டினான். பல்லவன் சைவனாயினமையால் அவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடு என்னும் இடங்களிலும் சமண சமயம் அடியோடு தொலைந்து சைவ சமயம் முன்போலத் தழைத்தோங்குவதாயிற்று.

இஃது இவ்வாறாக, சமண் சமயம் மிக்கோங்கி இருந்த பொழுது சீகாழியில் கவுணிய கோத்திரத்தில் 'சிவபாத இருதயர்' என்னும் அந்தணர் ஒருவர், புறச்சமயத்தை நீக்கிச் சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்காகவே தமக்கு ஒரு புதல்வரைத் தரும்படி தோணியப்பரை நாள்தோறும்

வேண்டிவந்தார். அவரது தவம் பலித்தது. தோணியப்பர் அருளால் அவருக்கு அவர் தம் மனைவியார் பகவதியார் வயிற்றில் ஒரு புதல்வர் பிறந்தார். அவருக்கு இரண்டு வயது நிரம்பி மூன்றாவது வயது தொடங்கிற்று. அப்பொழுது ஒருநாள் அவர் வழக்கம்போலக் கோயிற்குளத்திற்கு நீராடச்சென்ற தம் தந்தையாரை விடாப்பிடியாகப் பின் தொடர்ந்து சென்றார். தந்தையார் குழந்தையைக் கரையில் வைத்து நீராடி, 'அக மருடணம்' என்னும் ஸ்நானத்தைச் செய்யச் சிறிது நீருள் மூழ்கினார், தந்தையாரைக் காணாமையால் அழுகின்ற புதல்வர் திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து 'அம்மே, அப்பா' என்று அழுதார், சிவபெருமான் அவரது அழுகையையே முன்னிலை யாகக் கொண்டு அம்பிகையுடன் இடப வாகனத்தில் வந்து அம்பிகையின் ஞானப்பாலை ஒருகிண்ணத்திற் கறந்து கொடுக்கச் செய்தார். நீராடிக் கரை ஏறிய தந்தையார் குழந்தை கையிற் பாற்கிண்ணம் இருப்பதைக்கண்டு, 'உனக்கு என்னையறியாமல் பால் கொடுத்தவர் யார்? அவர்களைக் காட்டு' என்று ஒரு சிறு கோலைக் கொண்டு ஓச்சி அச்சுறுத்தினார். புதல்வர் வானத்தில் நிற்கும் சிவபெருமானைத் தமது கைவிரலாற் சுட்டி, ''தோடுடைய செவியன்'' என்னும் திருப்பதிகத்தால், 'என்னை இந்நிலையாகச் செய்தவர்' இவரே எனக் காட்டினார். சிவபாத இருதயர் தமது தவம் பலித்தது என்று பெருமகிழ்ச்சியுற்றார். ஞானப்பால் உண்ட அவர் ஞானசம்பந்தர் ஆனார். ஞான சம்பந்தர் பின்பு சிவதலயாத்திரை செய்து ஆங்காங்குத் திருப் பதிகம் பாடி வழிபடும் தொண்டினையே மேற்கொண்டார். இதையறிந்த நாவுக்கரசரும் அவரைக்காணவேண்டி சீகாழிக்கு எழுந்தருளினார். இருவரும் சந்தித்தபொழுது ஞானசம்பந்தர் நாவுக்கரசரது முதிர்ந்த வயதையும், சிவமேயாய்க் காட்சியளிக் கின்ற நிலையையும் கண்டு, அவரை 'அப்பரே' என அழைத்து மகிழ்ந்தார்.

பல இடங்களுக்கு இவ்விருவரும் சேர்ந்து யாத்திரை செய்தார்கள். தனித்தனியாகத் தமிழ்நாடு முழுவதும் யாத் திரை செய்து ஒவ்வொரு சிறிய ஊருக்கும் சென்று ஆங்குள்ள கோயிலை வணங்கிப் பதிகம்பாடினார்கள். அதனால் தமிழ்நாடு முழுதும் சைவமயமும், திருப்பதிகமயமும் ஆயிற்று.

பாண்டிநாட்டில் அப்பொழுதிருந்த கூன்பாண்டியனுக்கு மனைவியாராக இருந்தவர் சோழ அரசன் மகளார் மானியார்.

அவரும் அவருடன் சோழனால் அனுப்பப்பட்டிருந்த அமைச்சர் 'குலச்சிறையார்' என்பவரும், பாண்டியனும், பாண்டிநாடும் சமண் சமயத்தில் அழுந்தியிருப்பதற்கு வருந்தித் தாங்கள் மாத்திரம் சைவ சமயத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் ஞானசம்பந்தரது பெருமையைக் கேள்வியுற்று அவரைத் தங்கள் நாட்டிற்கு எழுந்தருளி வரும்படி சிலபெரியார் மூலமாக வேண்டுகோள் விடுத்தனர். அப்பெரியவர்கள் ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் திருமறைக்காட்டில் (வேதாரணியத்தில்) இருந்தபொழுது வந்து ஞானசம்பந்தரை வணங்கிச் செய்தியைத் தெரிவித்தனர். ஞானசம்பந்தரும் பாண்டிநாட்டிற்கு எழுந்தருளினார், அங்கு அவருக்குச் சமணர்கள் பல இன்னல்களை இழைத்தார்கள். சிவபெருமான் திருவருளால் அவற்றாலெல்லாம் தீங்கின்றியிருந்து அனல்வாதம், புனல் வாதங்களைச் செய்து சமணர்களை வென்றார். பாண்டியனும் உண்மையுணர்ந்து ஞானசம்பந்தரிடம் திருநீறுபெற்றுச் சைவனாகப் பாண்டிடநாடு முழுதும் சைவமயமாயிற்று.

ஞானசம்பந்தர் வாயிலாகவும், நாவுக்கரசர் வாயிலாகவும் இறைவன் நிகழ்வித்த அற்புதச் செயல்கள் எத்தனையோ பல. அவற்றால் அன்றைய மக்கள் இவ்விருவரது பெருமைகளை உணர்ந்து அவர்வழியே நின்றனர். அன்று ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் வரவில்லை என்றால், இன்று வேதம் எங்கே இருக்கும்? விபூதி உருத்திராட்ச பஞ்சாட்சரங்கள் எங்கே இருக்கும்? நாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெறக்கூடிய இவ்விருவரையும் வைதிகர்கள் யாவரும் முதலில் நினைக்க வேண்டாவோ? இவர்கள் காட்டிய நெறியை முற்றிலும் பற்றும் பக்குவம் இல்லாவிடினும், 'வைதிகம்' என்னும் அளவிற்கேனும் இவர்களைப் போற்றுதல் வேண்டாவோ? சைவர்களே இவர்களை முதலில் போற்றவில்லை என்றால், பிறரைப்பற்றிக் கூறுவானேன்?

சமண, பௌத்த மதங்கள் தருமத்தை வற்புறுத்தித் தருமோபதேசம் செய்துவந்தன என்றாலும், அவைகள் தெய்வத் திருவருளை வற்புறுத்தவில்லை. அதனால் தெய்வத் திருவருள்நெறியினர் யாராயினும் அத்திருவருளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உலகிற்கு எடுத்துக்காட்டிய ஞானசம்பந்தரையும், நாவுக்கரசரையும் முதலில் வைத்துப் போற்றக் கடமைப்பட்டவர்களே. அதைத்தான் சைவ ஆதீனங்கள் செய்து வருகின்றன.

அப்பர், சம்பந்தர் இருவருக்கு முன்னே பக்திப்பாடலை மிகுதியாக வழங்கி எங்கும் பக்தி வெள்ளம் பெருகச் செய்து சிவபெருமான் திருவருளில் மக்களை ஈடுபடுத்தியவர் மாணிக்க வாசகர். அப்பர், சம்பந்தர் இருவருக்குப் பின்னே, அவர்கள் காட்டிய திருவருள் நெறியில் நின்று பேறு பேற்றவர் எவரே னும் உண்டோ என்பார்க்கு 'பலர் உண்டு; அவ்விருவர் காலத்தினும், அவர்கள் காலத்திற்கு முன்னும், பின்னும் சிவத் தொண்டினைச் சிறக்கச் செய்து பெரும்பேறுபெற்ற திருத் தொண்டர்கள் பலர்' என்பதனை எடுத்துக்காட்ட ஆலால சுந்தரர் அவதாரம் செய்து திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்து அற்புதங்கள் பலவற்றை இயற்றி யாவரும் காண யானைமேல் ஏறிக் கயிலாயம் சென்றார். புறச்சமயத்தைக் களைந்து சைவ சமயத்திற்குப் புத்துயிர் கொடுத்தமைபற்றி ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் முதலாசிரியராகக் கொள்ளப் பட்டனர். அவர்களது வரலாற்றிற்குத் தோற்றுவாய் செய்து, அவர்களையே அடியொற்றித் தலங்கள் தோறும் சென்று திருப்பதிகம் பாடினமையால் சுந்தரரை அவர்களோடு இணைத் தும், மிக முற்பட்டவராகிய மாணிக்கவாசகரை இறுதியாகவும் வைத்து, 'நால்வர்' என வழங்கினர் பெரியோர். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் இந்நால்வருமே சைவ சமயாசாரியர். சைவத்திற்குமட்டுமன்று வைதிக சமயத்திற்கே இவர்கள்தாம் ஆசிரியர். அதனால், 'சமயாசாரியர்கள்' என்றே இவர்கள் வழங்கப்பெறுவர். தோத்திரவடிவில் இவர்கள் விளக்கிய நெறியையே பின்பு சந்தானசாரியர் சாத்திர வடிவில் விளக்கினார்கள். ஆகவே, 'தோத்திரம், சாத்திரம்' என்னும் இரண்டும் சைவ சமயத்தின் இருகண்களாகும். இவைகளை அருளிச்செய்த சமயாசாரியர், சந்தானசாரியர் என்னும் இருவரையும், அவர்களது அருள் வாக்குக்களையும் போற்றி அனைவரும் தெய்வத் திருவருளுக்கு உரியராதற்கு வேண்டிய பணிகளே இன்று சைவ ஆதீனங் களில் நடைபெறுகின்றன. அதனை அறிந்து அவற்றில் பங்கு கொண்டு திருவருளுக்கு உரியவர்களாதல் மக்கள் கடமை யாகும்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி!
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி!
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி!
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி!

மாயூரம் – வள்ளலார்கோயிலில் 28—7—67 இல் நிகழ்ந்த

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

மங்கைநல்லூர் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார்
பணிவன்புடன் சமர்ப்பித்த

வரவேற்பிதழ்

நாளும் தெய்வீகத்தால் ஞானம் பரப்பும்
ஞான வள்ளல்களே! வருக !! வருக !!!

வானாகி, மண்ணாகி, வளியாகி, ஊனாகி, உயிராகி இவ்வாறு எல்லா இடத்தும் உளன் எங்கள் தம் இறைவன். அவன் தன் பெருங்கருணைத்திறத்தை நம்மால் இயம்புதல் எளிதோ? இன்ன தன்மையன் என்று அறிய முடியாத இறைவனின் திருவடியை, மெய்யடியார்கள் சென்று சேர ஆசாரியன் மூலம் முயலுதலே நம் மரபு. நாம் அவ்வாறு சரிவர முயலவில்லை என்பதைக் காட்டவோ என்னவோ நம் ஆசாரியர்கள், அடியவர்களாகிய நம்மை நோக்கி வந்து அருளுரை வழங்குகிறார்கள். அது நாம் செய்த புண்ணியம். இனிமேலாவது நாம் முயன்று, அவனருளாலே அவன் தாள் வணங்குவோம். தெய்வீகப் பேரவை தொடங்கியது முதல் தமிழகம் முழுதும் மேன்மேலும் தெய்வீக மணம் கமழ்ந்து வருவதை உளமார வரவேற்கிறோம். தமிழகத் திருமடங்களின் மகாசந்நிதானங்கள், எப்பாரும், எப்பதமும் எங்கணும் சென்று எந்தையின் அருட்புகழை இயம்பி வருகிறார்கள். அவர்கள் தம் திருவடிகட்கு எங்களது பணிவான வணக்கங்களைத் தெரிவித்து வருக! வருக! என்று வரவேற்றுப் பெரும் பயனடைகிறோம். அருட்பெரும் சந்நிதானங்களின் அருளாணையைப் பெற்று, அயராது அல்லும் பகலும் பாடுபடும் அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் அவர்களின் இறைபணியைப் போற்றி வருக! வருக! என வரவேற்கிறோம்.

தங்கள் அன்புள்ள,

27—7—67. சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார்.

திருவாரூர் - விஜயபுரம் ஸ்ரீ ரேணுகாதேவியம்மன் ஆலய நிர்வாகிகள் வாசித்தளித்த

வரவேற்பு வாழ்த்திதழ்

தமிழகம்தந்ததகைசால்மகாசந்நிதானங்களாம் குருமார்களே!

பண்டுதொட்டு இன்றுவரை பாரதம் தெய்விக வாழ்வில் தலைசிறந்து விளங்குகிறது. இத் தெய்வநெறி தழைக்கத் திருமடங்களே நெறிபல வகுத்து மக்களைத் தெய்வ நெறியில் நிற்கச் செய்கின்றன. இன்று தமிழகத்தின் திருமடங்களில் வீற்றிருக்கும் மகா சந்நிதானங்களாகிய தாங்கள் அனைவரும் எளிவந்த வான்கருணை கொண்டு ஈண்டு எழுந்தருளி அருளுரை வழங்க இருப்பது தமிழ்நாடு செய்த தவப்பயனேயாகும். தங்களனைவரையும் வருக! வருக! என வரவேற்கிறோம்.

உயிர்களை உய்விக்கும் உத்தமப் பெரியோர்களே!

"உடம்பை வளர்ப்பது உயிரை வளர்ப்பதற்கே! இந்த உண்மையை உணராத உலகாயதர் இன்று உடம்பை வளர்ப்பதையே பெருநோக்காகக் கொண்டுள்ளனர். இவர்கள் நிலைக்கு இரங்கியே அப்பரடிகள் "ஆக்கைக்கே இரைதேடி அலமந்து - காக்கைக்கே இரையாகிக் கழிவரே" என்று கூறியுள்ளார். இந்நிலையிலுள்ளாரை உய்விக்க மானிடச் சட்டை தாங்கி வந்துள்ள பரம்பொருளின் கூறுகளாகிய தாங்கள் அனைவரும் அருளுரை வழங்க வந்துள்ளீர்கள். தங்கள் அருளுரைகளால் - நாடு - தேயம் - உலகம் உய்திபெறுக.

தெய்வத் திருவருளைப் பரப்பும் செம்மைசால் நல்லீர்!

தெய்வநெறி ஒன்றே பலதுறையிலும் பிளவுண்டு கிடக்கும் மனித சமுதாயத்தைப் பிணைத்து ஒன்றுபடுத்த வல்லது. அத் தெய்வநெறி தழைத்துச் சீர்சால் அவனி வளம் கொழித்து - மன்னுயிர் வாழ வழிவகுக்கும் தாங்கள் அனைவரும் "வானவர்கள் வாழ்த்துவதும் - தாம் வாழ்வான்" என்ற மணிமொழியின் படி வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்,

திருவாரூர் – விஜயபுரம்
ஸ்ரீ ரேணுகாதேவியம்மன் ஆலய நிர்வாகிகள்.

27—7—67.

மாயூரம் தாலுக்கா இராசகோபாலபுரம் பாலர் வழிபாட்டுச் சங்கத்தின் சார்பில் வாசித்தளிக்கும்

வரவேற்பிதழ்

திருக்கோயில்கள் திருப்பணி, நாள்வழிபாடு, திருவிழாக்கள் சமயப் பேரவைகள் தெய்வத்தமிழ் நூல் வெளியீடுகள் மூலம் நாளும் சைவ சமயத்தைச் சிறப்பாகப் பரப்பிவரும் இரு ஆதீனங்களின் மகா சந்நிதானங்களே வருக! வருக!

தெய்வ வழிபாட்டுணர்வு நாடெல்லாம் பரவ "தமிழ்நாடு தெய்விகப் பேரவை" கூட்டித் திசையனைத்தும் இறைமணம் கமழச் செய்துவரும் இருசந்நிதானங்களும் இங்கு எழுந்தருளி இப்பேரவையில் எங்களுக்குச் சிறந்த வழியை வகுத்தளிக்க வருக! வருக! என மனமொழி மெய்களால் வணங்கி வரவேற்கின்றோம்.

"இளமையிற்கல்" என்று அருளிய ஔவைப் பிராட்டியாரின் வாக்குப்படி ஆசிரியர்களாகிய நாங்கள் சிறுபாலர்களுக்குக் கல்வி கற்பித்து வருகின்றோம். ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் ஆணையின்படி "பாலர் வழிபாட்டுச் சங்கம்" நிறுவி பாலர்களைத் தெய்வீக வழியில் ஈடுபடச் செய்கின்றோம். பள்ளிதொடங்கியதும் குழந்தைகளுக்கு ஔவையார் அகவல், திருக்குறள் கடவுள் வாழ்த்துப்பகுதி முதலியவற்றிலிருந்து தினம் ஒன்றாக நீதிபோதனை செய்து வருகின்றோம்.

ஆண்டுதோறும் மார்கழித்திங்களில் மாநாடு கூட்டி பாலர்களைப் பாவைப்பாடல்களைப் பாட ஊக்குவிக்கின்றோம். இவ்வாறு நாங்கள் கல்வியறிவினைப் புகட்டுவதுடன் இயலும் வகையில் இறை பணியும் புரிந்து வருகின்றோம்.

இறையருள் நிரம்பப்பெற்று அருட்செங்கோலோச்சும் பரமாசாரியர்களாகிய தாங்கள் எங்களுக்கு நல்லாசிகூறி வாழ்த்தியருள மீண்டும் வருக! வருக! வருக! எனக்கூறி வணங்குகின்றோம்.

இங்ஙனம்,

27—7—67. தலைவர், G. இராமமூர்த்தி.

வீரத்திற்கோர் விசயன்*

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A.. Dip. Ling

விசயனின் வீரம் :

தமிழ் இலக்கணத்தில் இடைச் சொற்கள் தரும் பொருள் இன்ன இன்ன என்று எடுத்துரைக்கும் போது ஏகார இடைச் சொல் தரும் பொருள் சிலவற்றைச் சொல்வார்கள். அதில், ஒருவகை பிரிநிலை ஏகாரம் என்பது. சிறப்பு முதலிய காரணங்களால், மற்றவற்றினின்றும் பிரித்துக் காட்டும் 'ஏ' என்ற இடைச்சொல். இதற்குப் பழைய உரையாசிரியர்கள் காட்டும் எடுத்துக்காட்டு ஒன்றுண்டு. 'ஐவருள் விசயனே வில் வீரன்' என்ற தொடரே அது; இதைச் சொல்லாத தமிழ் ஆசிரியர் இல்லை: கேளாத தமிழ் மாணவரும் இல்லை. விசயனின் வீரத்தை வியந்து போற்றியது தமிழ் உலகு என்பதற்கு இதைவிட வேறு சான்றும் வேண்டுமோ ?

சமயச் சான்றோர் பாராட்டு :

இறைவன்பால் இதயத்தைச் செலுத்திக் கல்லும் கரையக் கனிந்து கவிமழை பொழிந்த சுந்தரரும், 'விசயனே வில்லுக்கு' என்று எடுத்துப் புகழ்வாராயின் வேறு என்ன கூறுவது ?

எல்லாம் வல்ல இறைவனை ஏத்துதலையன்றி வேறறியாத அப்பரடிகளால் எண்ணற்ற முறை எடுத்துப் போற்றப்பெறும் ஏற்றம் உடையவன் விசயன். அவனது வில்லாற்றலைத் தம் சொல்லாற்றலால் அழகு படுத்தும் அரிய வாய்ப்பும் அப்பரடிகளுக்கே அமைவதாயிற்று.

" அரும் பெருஞ்சிலைக்கை வேடனாய் விறற்பார்த்தற் கன்று
உரம் பெரிதுடைமை காட்டி ஒள்ளமர் செய்து மீண்டே

---

* 23—7—66 இல் திருச்சி வானொலி நிலையத்திற் பேசியது

> வரம் பெரிதுடையன் ஆக்கி, வாளமர் முகத்தின் மன்னும்
> சரம் பொலி தூணி தந்தார் சாய்க்காடு மேவினாரே ''

என்பது அப்பர் வாக்குகளில் ஒன்று.

சீரிய படைப்பு :

வில்லியின் பாத்திரத்திறன் விளங்கும் சீரிய படைப்புக்களில் - தனஞ்சயன் பெறும் இடம் தக்கது; சீரியது. வீரத்திற்கு ஒரு விசயனாகவே அப்பெருவீரன் விளங்குகின்றான்.

ஐவருடைய பெருவீரத்தை வில்லிபுத்தூரார் அவ்வப்போது எடுத்துப் பாடுவாரேனும் வில்லாற்றல் வீரனாக விளங்கும் விசயனுடைய வீரத்தை எடுத்துக்கொண்டால் தனிச் சந்தமும், வீறும், தாளப்போக்குமாக அவர் கவிதை பொங்கித் ததும்பிச் சுழியிட்டுப் பாய்கிறது; அவனுடைய வீரப் பேச்சுக்களை எடுத்துரைக்கத் தொடங்கினால், கனல் வீசும்; கவிமழை அங்கே பெருக்கெடுக்கிறது. அப்படி ஓர் அற்புதமான படைப்பாக - இலக்கியப் பயிற்சி உடையார் இதயம் விட்டு என்றும் நீங்காத நினைவாக அம்மாபெரும் வீரனை உருவாக்கியுள்ளார் வில்லியார்.

இராமபிரானைப் போன்றவன் :

அருச்சுனன் இளமை முதலே பெருவில்வீரன். அதனைப் பல நிகழ்ச்சிகளால் அறிகின்றோம். துரோணரால் பாராட்டப் பட்ட தலையானவன் அருச்சுனன். ஏனைய குருகுலத்து மாணவர்களினும் அருச்சுனன் ஆற்றலிற் சிறந்து விளங்கினான். தன்னுடைய அறிவு சான்ற மாணவனிடம் அன்புவையாத ஆசிரியரும் உண்டோ? என்கின்றார் கவிஞர். வில்லாற்றலில் விசயன் இராமபிரானை ஒப்பவன்; இது கௌரவர்களுக்குப் பொறாமையைத் தூண்டிவிட்டது. ஆயினும் பகலவன் மீது மின்மினிகள் கொள்ளும் பொறாமையைப் போன்றதே இது. துரோணன் இதனால் இத் தலைமாணவன் மீது பெருவிருப்பம் கொண்டார் என்கிறார் கவிஞர். அவ்வழகிய கவிதையை விசயன் இராமபிரானை ஒத்த வில்வீரன் எனக் கூறும் பாடலை ஒருமுறை காணலாம்.

> '' வெஞ்சிலையினால் இவன் இராகவனை ஒக்குமென
> விசயன் விசயத்தின் மிகவே
> எஞ்சிய குமாரர்கள் பொறாமையின் மிகுந்தனர்கள்
> இரவிஎதிர் மின்மினிகள் போல்

அஞ்சொல் முனிதானும் இவன்மேல் எவரினும்பெருக
அன்புடையன் ஆகியகலான்
நெஞ்சுற அருங்கலைகள் கற்குமவர் தம்மளவில்
நேயம் நிகழாதவர்கள் யார்?''

இளமை வீரம் :

மரத்தின் நுனிக்கிளையில் கள்ளிக் காக்கையின் பதுமையைத் தொங்கவிட்டபின் அதன் தலையைக் குறிபார்த்து எய்து வீழ்த்த வேண்டிய போட்டியில், அருச்சுனன் வென்றான். இது இவனுடைய வீரம் இளமையிலேயே விளைந்து நின்றதென்பதற்குச் சான்று ஆகும்.

விசயனுக்கு வீரம் காட்டிச் செயலாற்றவேண்டிய சில நிகழ்ச்சிகள் இளமை முதலே வாய்க்கலாயின. ஆசிரியர் துரோண முனிவர் தன் அன்பு மாணவர்களுடன் ஆற்றில் இறங்கி நீராடுகிறார்; மாணவர்கள் ஒரு துறையிலும் தாம் ஒரு துறையிலுமாக. ஆசிரியருடைய தாளை ஒரு முதலை பற்றிக் கொள்கிறது. மற்றவர்களால் முடியாத பெருஞ் செயலை இவ்விடத்துச் செய்கிறான் விசயன். குறிபார்த்து விசயன் விட்ட கணை முதலையை வீழ்விக்கிறது; ஆசிரியரை வாழ்விக்கிறது. தன் ஆசிரியனது உயிரையும், வில்லாற்றலால் காக்கக் கூடிய பெருந்திறமை இவனுக்கு வாய்த்தது என்றால் வேறு கூறவும் வேண்டுமோ? இராமபிரானை ஒத்தவன் என்று முன்னே பாராட்டினார் கவிஞர்; இங்கே கசேந்திரன் நிகழ்ச்சி நினைவிற்கு வர, சக்கரத்தால் முதலையைக் கொன்று அன்று ஆனையைக் காத்தானே, அண்ணல் நெடுமால்! - அவன் போன்றே விசயனும் இங்கு விளங்குகிறான் என்று பாடி மகிழ்கின்றார்.

'' முத்திமுனி தாளிணையை, நீர்படி தடந்துறையில்
முதலை கவர்வுற்றதெனலும்,
சித்திரவில் வீரர்பலரும்தம் வெறுங்கையொடு
சென்று, அருகு நின்றுவிடவே
பத்தியின் விரைந்து, பொதுவே இபம்அழைக்கஒரு
பறவை மிசைவந்த நெடுமால்
கைத்திகிரி போல்கணையின் விசயன் அதனைப்பழைய
கார்முதலையில் துணிசெய்தான்.''

'சித்திர வில் வீரா'

மற்றையவர்கள் கைகளில் வில் இருந்தது; ஆம்! அது வேலைப்பாடுகள் மிகுந்த அழகிய வில் என்கின்றார் கவிஞர்;

'சித்திர வில்' என்ற அழகிய தொடரால் அவர்களிடத்திலே ஆற்றல் இல்லை என்பதனை நகைச் சுவையுடன் குறிக்கின்றார் அந்த வில்லையும் அவசரத்தில் கீழேவிட்டு, ஆபத்திற் சிக்கித் தவிக்கும் ஆசிரியர் பக்கம் 'வெறுங்கையுடன் சென்றார்கள்; அருகில் நின்றுவிட்டார்கள்' என்று கவிஞர் பாடும்போது, இவர்களைவிடக் கோழைகள் உலகில் வேறு இருக்க முடியாது என்று நம் உள்ளத்தில் தோன்றுகிறது அல்லவா?

பிற நிகழ்ச்சிகள் :

கண்களைக் கட்டிக்கொண்டு, குளத்தில் இட்ட மண் பொம்மையை இலக்குத் தவறாமல் அடிக்கும் ஆற்றலும், ஒரே கணையால் ஆலமரம் ஒன்றின் இலைகளனைத்தையும் உதிர்க்கும் திறமையும் உடைய அருச்சுனன் வில்லாற்றலை அத்தினபுரமே கண்டு வியந்தது. இவ்வியத்தகு வீரமே பின்னே இப் பெருவீரன் எய்திய வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படை என்பதை மறந்துவிடக் கூடாது.

பாஞ்சாலியாம் பரிசு பெறல் :

அரக்கு மாளிகைத் தீயினின்றும் தப்பிய பாண்டுவின் புதல்வர்கள் பாஞ்சால நகரம் சென்றார்கள். அங்கே துருபதன் தன் மகள் திரௌபதி என்னும் அழகிக்குச் சுயம் வரம் செய்ய ஏற்பாடுகள் செய்கிறான். பாஞ்சாலி அருச்சுனனின் பேராற்றலை அறிந்து அவன்பால் காணாமலேயே காதல் கொண்டிருந்தவள். பாண்டவர்கள் தீயில் எரிந்துவிட்டார்கள் என்றே நம்பிய அந் நங்கை வருந்துகிறாள். 'கோட்டிய சிலையினோடும் கொடிமணித் தேரினோடும், காட்டிய கோலமன்றிப் பிறிதொன்றைக் காண்கிலாதாள்' என்று விசயன் வீரத்தை விரும்பிய பாஞ்சாலியை நமக்கு முதற்கண் அறிமுகப் படுத்துகின்றார் கவிஞர்.

அந்தண வடிவில் வந்திருந்த அருச்சுனன் வில்லை வளைத்து வெற்றிகொள்கிறான். பாஞ்சாலப் பாவையைப் பரிசாகப் பெறுகிறான். இங்கும் வேந்தர் யாராலும் இயலாத வீரம் காட்டியே வேல்விழியாளைப் பரிசு பெறுகிறான் என்று கவிஞர் அழகுறப் பாடுகின்றார்.

பிற நிகழ்ச்சிகளில் :

கண்ணபிரான் தங்கை சுபத்திரையைத் திருமணம் செய்துகொள்ளுங்காலும் விசயனின் வீரமிக்க வில்லுக்கு வேலை ஏற்படுகிறது. இராசசூய வேள்வியின் பொருட்டு வடதிசை செல்கிறான்

தனஞ்சயன். அவன் வென்ற நாடுகளின் பெயர்களைக் கவிஞர் அழகுறப் பாடுகின்றார். குலிங்கம், காலுவம், மோதாபுரம், வாமதேவம், சுதாமம், சுகங்குலம், உலூகம் முதலிய நாடுகள். பகதத்தன், கந்தர்வர்கள், யட்சர்கள் முதலியோரை யெல்லாம் வென்று பற்பல நிதிக் குவைகளை ஈட்டுகின்றான்.

‘அடங்கிய வீரம்’

பாஞ்சாலியை அவமானத்துடன் பழிக்கும் கட்டம். மக்கள் அஞ்சுகிறார்கள். என்ன கூறுகிறார்கள்? ‘பொரும் போர் வீமன் பொறுத்தாலும் பொறற்றேர் விசயன் பொறான்’ என்பார். வீமனே பொறுத்தாலும் விசயன் பொறுக்கமாட்டானே என்பது மக்கள் மதிப்பீடு. ‘வீமன் கதைமேல் கைவைக்க, விசயன் சிலை மேல் விழிவைக்க’ மூத்தவன் தருமன் பொறுமையுடன் இருக்க அறிவுரை கூற, அடங்குகிறார்கள் தம்பியர். அண்ணன் உரைக்கு அடுத்தன செய்வதே குறிக்கோளாக உடையனாதலின், விசயனின் வீரம் இங்கே அன்பிற்கு முன்னே - அறத்தின் திருமுன்பு - அடங்கி நடக்கக் காண்கின்றோம்.

திசையெலாம் பரவிய தீரம்:

விசயனின் வீரம் எத்திசைக்கண்ணும் எடுத்தேத்தப் பெற்றது என்று விளக்கும் வில்லியார் திருவாக்குகள் பின்வருவன :-

“விசையவெம்பகழி விசையன்வெவ் விசையொடு இருநிதிக் கிழவன் மேவிவாழ்
திசையடைந்து கதிர் இரவியென்னும்வகை சிறிமாறுபொரு தெவ்வராம்
நிசையழிந்து வெளியாக நால்வகை நெருங்கு சேனையொடு நிலனுநின்று
அசைய வன்பினுடன் ஏகினன் எழு பராகம் எண்திசை அடைக்கவே.”

(நிசா - இரவு; நிசையெனத் தமிழாக்கம் பெற்றுள்ளது பராகம் - புழுதி.)

“பாரதப் பெயர்கொள் வருடமாதிபல பாரினுள்ளநர பாலரைப்
பேரறக் குலமும் வேரறப் பொருது பிஞ்ஞகன்கிரியும் இமயமும்

"சேர மொத்தி, யவண் உள்ள,கந் தருவர் கின்னரேசர்பல
திறையிடப்
போரடர்த்துக முடிந்தகாலே யெழுபுணரி யென்னநனி
பொங்கியே."

(பிஞ்ஞகன் கிரி - கயிலே புணரி - கடல்.)

" அத்திசைக் கணரசான உத்தர குருக்கண் மேன்மையை
அடக்கிமேல்
"எத்திசைக்கும் இவனன்றி வீரர்இலர்" என்று தேவரும் இயம்பவே
மெத்திசைப்பனி நிலாவெழச் சமரவிசயகம்பமும் நிறுத்தினன் ;
முத்திசைக்குமதி வெண்குடைக்கடவுள் முதல்வனைஅரி
புதல்வனே."

தியாக வீரம் :

விராட பருவத்திலே, பிருகந்நளை என்ற பேடியின் வேடத்திலே விசயனின் கணைகள் மழையெனப் பொழிகின்றன ; கௌரவர் கலங்கி ஓடுகின்றார்கள். ஆநிரைகள் மீட்கப்பெறுகின்றன. இங்கே சார்ந்துள்ள நாட்டின் நலனுக்காக வில்லேந்தும் தியாக வீரம் பளிச்சிடக் காண்கின்றோம்.

ஐந்து ஊர் வேண்டுவோம் என்று அண்ணன் தருமர் உரைக்கும்போது தம்பியர் சீற்றம் பொங்குகின்றது. அருச்சுனன் பேசுகின்றான்.

" தேவராயினும் பழைய தயித்தியராயினும் மற்றும்
செப்புகின்றோர்
யாவராயினும் எதிர்ந்தோர் உயிர்உண வென்றிருப்பதுவே
என்கைவாளி"

என்கின்றான் உணர்ச்சி வடிவம் ஆகி. இந்த வீரம் பாஞ்சாலி துகிலுரியப் பார்த்துக்கொண்டிருந்ததனால் மாசுபட்டு விட்டதே. அந்த மாசு தீரவேண்டாமோ? என்று குமுறுகின்றான் ; இந்தக் குமுறல், மாசுபடாத தூய வீரமே விசயனின் மூச்சு என்பதை எடுத்துக்காட்டும் ஏற்றம் உடையதாகும் ; அந்த வார்த்தைகளும் அவற்றில் அடங்கியுள்ள கருத்துக்களும் மறக்கவியலாதவை. கேட்கின்றான் விசயன் :-

" தீண்டாத கற்புடைய செழுந்திருவைத் துகில்உரியச் செயல் ஒன்று இன்றி
நீண்டானே! கரியானே! நிமலாவென் றரற்றினளாய் நின்றுசோர
மாண்டார்போல் அதுகண்டு மன்னவையில் யாம்இருந்த மாசுதீர
வேண்டாவோ? வேண்டுவது, மேம்படுநல்லறமேயோ வேந்தர்வேந்தே!"

வில் ஏற்றம் :

பதினேழாவது நாள் போரில், கர்ணனால் அடிபட்ட தருமர், கர்ணனைக் கொல்லாததற்காக அருச்சுனனைச் சீறுகின்றார், காண்டீபம் என்ற விசயன்கை வில்லைத் தருமர் பழித்தபோது, தன் வீரவில்லைப் பழித்தவர்களைக் கொல்லுவதாகக் கொண்ட உறுதிப்படி, அவரையே கொல்ல எழுகின்றான் என்றால், அவனுடைய வீர உணர்வை விளங்கிக்கொள்ள வேறிடமும் உண்டோ?

'தவ வீரம்'

போரிலே வென்று குவிக்கும் வீரம் ஒன்றுமட்டுமே வீரம் என்பதில்லை. ஐந்து புலன்களையும் அடக்கி யாளும் வீரமும் சிறந்து எடுத்துப் பேசப்படும். 'புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம்' என்பது தமிழ்நெறி. சிவபிரானை நோக்கிப் பாசுபதாத்திரம் பெறக் கடுந்தவம் இயற்றும் அருச்சுனனிடம் இப்பெருவீரத்தையும் காண்கின்றோம். இந்திரநீலமலையில் அருச்சுனன் இயற்றிய பெருந்தவம், சிவபிரானுடன் அவன் போரிட்டது ஆகிய நிகழ்ச்சிகளை வில்லியின் சொற்களில் படிக்கும்போது விசயனின் வீரம் குறித்து நாம் பெருவியப்பு எய்துகின்றோம். 'ஒரு தாளின் மிசை நின்று நின்ற தாளின் ஊருவின்மேல் ஒருதாளை ஊன்றி, ஒன்றும் கருதாமல் மனம் அடக்கி விசும்பிேனோடும் கதிரவனைக் கவர்வனபோல் கரங்கள் நீட்டித்' தவம் செய்கின்றான். 'அருந்தவம் முன் புரிந்தவரில் இவனைப்போல் மற்று ஆர் புரிந்தார்' என்று கவிஞரே வியக்கின்றார்.

பாசுபத அம்பு பேறல் :

துரியோதனனால் அனுப்பப்பட்ட மூகாசுரன் பன்றி உருவாய் அருச்சுனனை அப்போது கொல்லவர, சிவபிரான் காக்கும்

பொருட்டு வேட்டுவக் கோலத்தில் வந்து, விசயனுடன் உரையாடி, விளையாடி இறுதியில் பாசுபத அத்திரம் தந்து மறைந்த செய்தியை அழகு ஒழுகும் தமிழில் கவிஞர் பாடுகின்றார்.

சிவபிரான் மேற்கொண்ட வேட்டுவக் கோலத்தையும். அவர்பின்னே வேட்டுவப் பெண்ணாக உமையம்மை முருகனை ஏந்தி உடன்வந்த கோலத்தையும் வில்லிபுத்தூரார் பாடும் திறம் இதுவாகும் :-

" ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத்து ஒருவன் அந்தப்
போரேனம் தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான் புனங்கள்எல்லாம்
சீரேனல் விளைகிரிக்குத் தேவதையாம் குழவியையும் செங்கையேந்திப்
பாரேனை உலகனைத்தும் பணிவுடனே புகழ்ந்திடத்தன் பதிபின்வந்தாள்"

அப்பரடிகள் எண்ணற்ற இடங்களில் இந்நிகழ்ச்சியை வியந்து பாராட்டுகின்றார். அவர் வாழ்ந்த கி. பி. ஆறும் நூற்றாண்டில், விசயனின் வீர வரலாறு தமிழ் நாட்டில் பெருகி வழங்கியதையும் இது குறிப்பதாகலாம்.

இதிகாசக் காவலன் :

காப்பியப் பொது நோக்கிலும், குணப்படைப்பிலும் அருச்சுனன் ஓர் அற்புதமான படைப்பு. 'வீரத்திற்கோர் விசயனாக'- பாரத நாட்டின் பழம் பெரும் இதிகாசக் காவலனாக அருச்சுனனை நாம் காண்கின்றோம். துள்ளி யெழும் அம்புகளைப்போன்ற அழகான சந்தக் கவிகளில், விசயனைப் படம் பிடித்துள்ளார் வில்லிபுத்தூரார்.

திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல்
வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

(மலர் 26, இதழ் 8, பக்கம் 432 இன் தொடர்ச்சி)

(6) விறன்மிண்ட நாயனார்

"விரிபொழில் சூழ்குன் றையார் விறன்மிண்டர்க்கடியேன்"

—திருத்தொண்டத்தொகை.

"பேசும் பெருமையவ் வாரூரனை யும்பிரானவனும்
ஈசன் தனையும் புறகுதட் டென்றவன் ஈசனுக்கே
நேசன் எனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்றம்மேய விறன்மிண்டனே"

—திருத்தொண்டர் திருவந்தாதி.

சேர நாட்டுச் *செங்குன்றூரில் வேளாளர்குலத்தில் தோன்றியவர் விறன்மிண்டர். சிவபெருமானது திருவடிகளில் பற்றுக் கொண்டவர். ஆசைகளை அறவே விடுத்தவர். சிவனடியார்களிடம் பேரன்புகொண்டவர். சிவதலங்களைச்சென்று தரிசிக்கும் இயல்புடையவர். இவர், செல்லுமிடங்களிலெல்லாம் சிவனடியார்களை முதலில் வணங்கிய பின்னரே சிவபெருமானை வணங்கச் செல்லும் இயல்புடையராய் விளங்கி வந்தார்.

திருவாரூரில் :

விறன்மிண்டர் ஒரு சமயம் மலைநாட்டைக் கடந்து சிவதலங்கள் பலவற்றையும் தரிசித்துத் திருவாரூரை அடைந்து தியாகேசனை வழிபட்டுக் கொண்டிருந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தியாகேசனை வழிபடப் பூங்கோயிலுக்கு வருகின்ற

---

* திருவாங்கூர் இராச்சியத்தில் கொல்லத்திலிருந்து கிழக்கே 12 மைலில் இத்தலம் உள்ளது. கங்கண்ணூர் என வழங்கப் படுகிறது. இது வைப்புத்தலம்.

காட்சியை விறன்மிண்டர் கண்டார். திருவாரூர் கோயில் முன் பகுதியில் உள்ள தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார் பலர் விற்றிருந்தனர். சுந்தரர் சிவனடியார்களை வழிபடாமல் ஒதுங்கிச் செல்வதைக் கண்ணுற்றார் விறன்மிண்டர்.

சுந்தரருடைய செயலுக்கு மனம் வருந்தி அடியார்களை வணங்காமல் சென்ற வன்றொண்டன் அடியார்களுக்கும் புறம் பாவன். அவரை வலிய ஆட்கொண்ட பெருமானும் நமக்குப் புறம்பானவர் என்று திருவருள் வழியே கூறினர். ஆயினும் அடியார் பலருடைய நல்லருளைப் பெற்றார்.

" சேணார் மேருச் சிலைவளைத்த சிவனார் அடியார் திருக்கூட்டம்
பேணா தேகும் ஊரனுக்கும் பிரானும்தன்மைப் பிறைசூடிப்
பூணார் அரவம் புனைந்தார்க்கும் புறகுஎன்றுரைக்க
மற்றவர்பால்
கோணா அருளைப் பெற்றார் மற்று இனியார் பெருமைகூறுவார் "

விறன்மிண்டர் கூறியதைக் கேட்ட சுந்தரர் அவரது அடியார் பக்தியைக் கண்டு வியந்தார். உடனே திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தால் திருக்கூட்டத்தை வணங்கித் தொழுது அடியார் உடன் நாம் உளது என்றருளிச்செய்தார்.

இவ்வாறு சிவனடியாரைப்பேணி வழிபட்ட விறன்மிண்டர்; திருவருள் துணையால் கணநாயகராய் விளங்கும் பேறு பெற்று இறைவன் திருவடி நிழலிற் கலந்தருளினர்.

உலகம் உய்யவும் சைவநெறி தழைக்கவும் சுந்தரருக்குத் திருத்தொண்டத்தொகை பாடும்படிச் செய்த பெருமை விறன் மிண்டருக்குரியதாகும்.

சில குறிப்புக்கள் :-

பெரியபுராணத்தில் காணப்பெருத சில செய்திகள் பின் வருவன. விறன்மிண்டர் சுந்தரரையும் தியாகேசரையும் புறகென்று கூறியபின்னர் தியாகேசர் வன்றொண்டருக்கு இரண்டாம் ஆவரணத்தில் வடக்குவாயிலில் காட்சிதந்தருளி ஞர். அதனையறிந்த வன்றொண்டர் இனித் திருவாரூரில் அடி யெடுத்து வைப்பதில்லை என்று உறுதிகூறி மனைவியாருடன் புறப்பட்டு புத்தாற்றங்கரையை அடைந்து அங்கு ஒரு பந்தல் அமைத்து அடியார் வழிபாடு செய்து கொண்டிருந்தார்.

யாரேனும் தம்மிடம் ஆரூர் என்று கூறினால் அவர்கள் கால்களை மழுவினால் துணிக்கும் சபதம் கொண்டிருந்தார். தியாகேசனை ஒருநாள் அடியவராய் வந்து நாம் இருப்பது திருவாரூர் என்று கூற அவரது கால்களை வெட்டுவதற்கு விறன்மிண்டர் துரத்த, வந்தவர் முன்னேஓட இருவரும் திருவாரூர் எல்லையை அடைந்தனர் அப்போது வந்த அடியவர் வந்தோம் இப்பால் என்று கூறி நின்றனர். தம் சபதம் கடந்தமையை உணர்ந்த விறன்மிண்டர் தம் கால்களைத் தாமே துணித்துக்கொண்டார். அடியவராய் வந்த பெருமான் காட்சி தந்து அருள் புரிந்தார் என்பது திருவாரூர் வரலாறு.

இறைவன் மதிற் சுவரை ஒட்டித் தரிசனம் அளித்த இடம் ஒட்டுத்தியாகர்கோயில் எனவும், நாயனார் பந்தல் அமைத்த இடம் ஆண்டிப்பந்தல் எனவும், வந்தோம் இப்பால் என்பது வண்டாம்பாலை எனவும் இப்போது வழங்குகின்றன. வண்டாம்பாலை வடக்குத் திருவாரூர் எனவும் வழங்கப்படுகிறது. இச்செய்திகள் கோவை சிவக்கவிமணி அவர்கள் அறிந்து எழுதியன.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Thiruvaiyaru

I had the occassion to visit the temple today along with my family and my eldest brother. The temple which is of great religious importance is well maintained and one gets the devine feeling automatically when entering the temp'e precincts. I feel proud that I hail from Tamil Nad which can boast of such great temples. I feel like visiting this temple again and again.

(Sd.) T. D. Sundar Raj,
District Revenue Officer, Thanjavur.

சூரியன்

வேதாந்த சிரோமணி,
பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாதலின் நோயற்ற வாழ்வை விரும்பாதவர் உலகில் இல்லை எனலாம். அந்த நோயற்ற வாழ்வு சூரியனிடமிருந்து பெறப்படும் என்பது "आरोग्यं भास्करादिच्छेत्" என்ற வாக்கியத்தினால் உணரப்படும். இவ்வித சூரியனுடைய வழிபாடு பாரத தேசத்தில் மட்டுமன்றி மற்றைய நாடுகளிலும் இருந்தது. இருக்கிறது என்றும் கூறலாம். பாரசீகர்களுடைய வேத நூலாகிய ஸெண்டவஸ்தையில் மித்ர, அர்யமா, பக என்ற சொற்களால் சூரியன் கூறப்படுகிறான். ரிக் யஜுர் ஸாம வேதங்களிலும் சூரியனைப்பற்றிய ஏராளமான ரிக்குகள் உள்ளன. காடகம் என்ற வேதபாகத்தில் சூரியனுடைய அஷ்டாக்ஷர மந்திரம் கூறப்படுகிறது. அந்தணர் யாவரும் காலையிலும் மாலையிலும் செய்துவரும் காயத்ரீ மந்திரமும் சூரியனைக் குறிப்பதாக உள்ளது. அஷ்டோத்தர சதோபநிஷத்துக்களில் சூர்யோபநிஷத் என்று ஒன்றும் உள்ளது. அதிலேயே சூரியனால் ஸங்கிருதி முனிவருக்கு உபதேசிக்கப்பட்டதாக அக்ஷ்யுபநிஷத் என்னும் ஒன்றுள்ளது.

பரமேச்வரனுக்கு அபிஷேகத்திலும் விஷ்ணுவுக்கு அலங்காரத்திலும் பிரீதி அதிகம் என்பதுபோல சூரியனுக்கு நமஸ்காரத்தில் பிரீதி அதிகம் என்பது "नमस्कारप्रियो भानुः" என்ற வாக்கியத்தினால் உணரப்படும், நமஸ்காரம் செய்வதில் மட்டுமன்றி, நமஸ்கரிக்கும்பொழுது "நமஸ்காரம்" என்று சொல்லப்படுவதிலும் பிரியமுள்ளவன் என்று 'नमतां नम उक्तिप्रियाय नमः" என்ற சகஸ்ரநாமத்திலுள்ள நாமாவினால் உணரப்படுகிறது. "रुग्घन्त्रे नमः" என்று அஷ்டோத்திர சதநாமாவிலுள்ள நாமாவை அனுசரித்து பிணி நீக்கம் கருதி சூரியனை நமஸ்காரம் செய்பவர்கள், வேதத்தில் ஆரண்யகத்தில் முதல் பிரச்னத்தை கூறிக்கொண்டு நமஸ்காரம் செய்கிறார்கள். இந்த பிரச்னத்திலுள்ள 132 பஞ்சாதிகளும் சூரியனுடைய பெருமையையுணர்த்துவன.

அசுரர் தவமியற்றி பிரமதேவனிடமிருந்து வரம் பெற்று, சூரியன் உதிக்கும்பொழுதும் மறையும்பொழுதும் அவனுடன் போர் செய்கின்றனர். அவ்வசுரர்கள், சந்தியாகாலத்தில் மறையோர் கொடுக்கும் அர்க்கிய நீரால் தள்ளப்படுகின்றனர் என்றும் **सन्ध्यायां गायत्र्या अभिमन्त्रिता आप ऊर्ध्वं विक्षिपन्ति ता एता आपो वज्रीभूत्वा तानि रक्षांसि मन्देहारुणे द्वीपे प्रक्षिपन्ति** என்ற அருணம் இரண்டாம் பிரச்னத்திலுள்ள வாக்கியங்கள் உணர்த்தும்.

இந்த சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய ஒரு சக்ரமுடைய தேரில் செல்லுவதாக "**सप्त युञ्जन्ति रथमेकचक्रम्**" என்ற வாக்கியம் தெரிவிக்கிறது. "**एको अश्वो वहति सप्तनामा**" என்ற வேதவாக்கியம் ஸப்த என்ற பெயருடைய ஒரு குதிரை சூரியனைச் சுமப்பதாகக் கூறுகின்றது. சூரியனுடைய தேருக்கு ஒரு சக்கிரம் என்பது **एकचक्रमेकधुरम्** என்ற வாக்கியத்தாலும் அறியப்படும்.

அக்நி, பாவக, வன்னி முதலிய பதங்கள் தீயை உணர்த்துவனவாக இருப்பினும் அக்நி என்று கூறி ஹோமம் செய்ய வேண்டிய இடத்தில் பாவக என்று சொல்லி ஹோமம் செய்யக் கூடாது. ஒவ்வொருசொல்லாலும் உணர்த்தப்படும் தேவதைகள் வெவ்வேறானவர் என்று வேதத்திற்குப் பொருளைத் துணிந்து உரைக்கும் மீமாம்ஸா சாஸ்திரம் கூறும். ஆதலின் ஸவிதா, பூஷா சூர்ய, அர்யமா முதலிய பதங்கள் சூரியனை உணர்த்துவனவாக இருப்பினும் வெவ்வேறு தேவதையாகவே கொள்ள வேண்டும். ஆகையால்தான் ஸவிதா என்ற சூரியன் ஹஸ்த நக்ஷத்திரத்திற்கும் பூஷா என்ற சூரியன் ரேவதி நக்ஷத்திரத்திற்கும் அர்யமா என்ற சூரியன் உத்தர நக்ஷத்திரத்திற்கும், மித்திரன் என்பவன் அனுஷ நக்ஷத்திரத்திற்கும், அதிதேவதை என்று வேதத்தில் கூறப்படுகின்றது.

சூரியன் தினந்தோறும் மாலையில் மறையும்பொழுது தன்னிடமுள்ள ஒளியை அக்நியிடம் வைத்துப் பிறகு மறைகிறான் ஆதலால்தான் இரவில் அக்நி தொலைவிலிருந்தும் நன்கு தெரிகிறது. என்று

अग्निं वा वादित्यः सायं प्रविशति, तस्मादग्निः दूरान्नक्तं ददृशे

என்ற வேதம் கூறும். அதையே கவிகுல திலகமாகிய காளிதாஸன்

"दिनान्ते निहितं तेजः सवित्रेव हुताशनः" (ரகு-4-1)

என்பதால், உலகமக்களுக்கு உணர்த்துகிறுன்.

"पूषा प्रपिष्टभागः अदन्तको हि तं देवा अब्रुवन"

என்ற வேதவாக்கியம் சூரியன் மாவை ஹவிர்பாகமாக அடை பவன். பல்லில்லாதவன் என்று கூறுகிறது. தக்ஷயாகத்தில் வீரபத்திரனுல் சூரியன் பற்களையிழந்தான் என்று புராணம் கூறும். சிவசகஸ்ரநாமம் पूषदन्तभिदे नमः என்ற நாமத்தினுலும் लुप्तदन्ताय नमः என்று சூர்ய அஷ்டோத்தர சதநாமாவிலுள்ள நாமத்தாலும் இது அறியப்படும்.

இவ்விதம் வேதத்தில் பலவிதமாக அறியப்படும் சூரியன் வேதாங்கமான ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் மிகவும் அதிகமாக வர்ணிக்கப்படுகிறுன். நவக்கிரஹங்களுக்கும் தலைவன் ஆதலின் கிரஹபதி, கிரஹராஜன் என்றும் நவக்கிரஹ மண்டலத்தில் நடுவில் இருப்பவன் என்றும் கூறப்படுகிறுன். காச்யபகோத்திரம். கலிங்கதேச அதிபதி. செந்நிறமான ஆடை, மாலை சந்தனம் இவைகளைத் தரித்தவன். பிரபவ வருஷம் மாகசுக்ல சப்தமியில் விசாகா நக்ஷத்திரத்தில் தோன்றியவன். சிம்ம ராசிக்கு அதிபதி, மேஷராசியில் உச்சன். துலா ராசியில் நீசன். பானுவாரத்திற்கு உரியவன், அக்நியை அதிதேவதையாகவும் ருத்திரனை பிரத்யதி தேவதையாகவும் உடையவன். கோதுமை தான்யத்தையுடையவன்; உலோகங்களில் தாம்பிரம் சூரியனுக்கு உகந்தது. வர்த்துளாகார (வட்டமான) மண்டலத்தில் இருப்பவன். பித்ருகாரகன், க்ஷத்திரிய ஜாதியன். சனியும் சுக்கிரனும் சத்ரு. சந்திரன் குரு செவ்வாய் இவர் மித்திரர். எருக்கம் சமித்து சூரியனுக்குரியது. எருக்கம் இலை வைத்துக்கொண்டு ஸ்நானம் செய்வதால் சந்தோஷிப்பவன் என்பது अर्कपर्णस्नानसंतोषिणे नमः என்ற ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்திலுள்ள நாமத்தாலும் விளங்கும். என்பன போன்ற பல விஷயங்கள் ஜ்யோதிஷ சாஸ்திரத்தால் விளங்கும்.

வேதங்களுடைய பொருளை விளக்கிக்கூறவே எழுந்தன இதிஹாஸங்களும் புராணங்களும். இதிஹாஸபுராணங்களிலும் சூரியனைப்பற்றிய பல வரலாறுகள் உள்ளன. இதிஹாஸ புராணங்கள் வேதோப பிர்ம்மணம் எனப்படும் மகாபாரதமும்

இராமாயணமும் இதிஹாஸம் எனப்படும். இராவணனுடன் போரிட்டு மிகவும் களைப்படைந்த ராமனுக்கு அகஸ்த்ய முனிவர் ஆதித்யஹ்ருதம் என்ற ஸ்தோத்திரத்தை உபதேசித்தார். அதை மும்முறை ஜபித்து பலத்தைப் பெற்று ராமன் இராவணனைக் கொன்றான் என்பது இராமாயணத்தில் பிரசித்தம். வால்மீகி ராமாயணத்தில் யுத்த காண்டத்தில் 107 ஆவது சர்க்கம் ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரம்,

மேலும் உத்தரராமாயணத்தில், பிர்மதேவனுடைய அருகில் இருந்த ரிக்ஷரஜஸ் என்ற ஆண் குரங்கு காட்டிற்குச் சென்று, சாபத்திற்குள்ளான குளத்தில் மூழ்கிப் பெண்ணாகி, திரும்புங்கால் சூரியனால் சுக்ரீவன் என்ற வானரராஜனை பெற்றது என்றும் சொல்லப்படுகிறது.

பஞ்ச பாண்டவர்கள் வனவாசம் செய்யும்பொழுது தர்ம புத்திரரால் சூரியன் துதிக்கப்பட்டு, அதனால் மகிழ்ந்து அக்ஷய பாத்திரத்தை அளித்தான்; என்பது மகாபாரதத்தில் காணப்படும். குந்திதேவி கன்னிகையாக இருக்கும்பொழுது, தந்தையான குந்திபோஜனுடைய கட்டளையினால் துர்வாஸ முனிவருக்கு பணிவிடை புரிந்தாள். அவளுடைய பணிவிடையால் சந்தோஷமடைந்த முனிவர் அவளுக்கு சில மந்திரங்களை உபதேசித்தார். அம் மந்திர மகிமையினால் சூரியனின் அருளைப்பெற்று, உடலோடு பொருந்திய கவசகுண்டலங்களையுடைய மிக்க புஜபலமுடைய தானசூரனான கர்ணனைப் பெற்றாள் என்பதும் மகாபாரதத்தில் கண்ட செய்தியாகும்.

தக்ஷனுடைய பெண்களில் ஒருத்தியும், கச்யபருடைய மனைவிகளுள் ஒருத்தியுமான வினதை இரண்டு முட்டைகளை ஈன்றாள், துக்கத்தினால் அவசரப்பட்டு ஒரு முட்டையை உரிய காலத்திற்கு முன்னதாகவே உடைத்தாள். அதில் தொடை வரையிலுமே வளர்ச்சியடைந்திருந்த கருடனுடைய அண்ணனாகத்தோன்றிய அருணன் சூரியனுக்கு சாரதியாக உள்ளான் என்றும் மகாபாரதம் கூறும்.

(தொடரும்)

பனையும் பயனும்

சி. அ.

மக்கட்கு மிகவும் பயன்படும் மரங்களில் பனைமரம் ஒன்று. ‘அற உள்ளம் படைத்தவனுக்குச் செல்வம் வரின், அது பயன் தரும் மரம் ஊர் நடுவில் நின்று பழத்தை உடையதாயினாற் போலும்’ என்கின்ற திருவள்ளுவர்,

“ பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின் ”

என்னும் திருக்குறளில் ‘பயன்மரம்’ எனப் பொதுவாகக் கூறினாரேயல்லது, அதனை, இன்னமரம் எனக் குறிப்பிட்டுக் கூறினாரில்லை. ஆயினும், அக்குறளுக்கு விளக்கம்போன்று அமைந்த நாலடிச் செய்யுள் ஒன்று, அதனை, ‘பனைமரம்’ என்றே குறிப்பிடுகின்றது.

நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்;
குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை.

இதனுள், ‘படுபனை’ என்றது, ‘பெண்பனை’ என்றதாம். கொடுத்துண்ணா மாக்களை ‘இடுகாட்டுள் நிற்கும் ஆண்பனை போன்றவர்’ என அச்செய்யுள் எதிர்மறையினாலும் இதனை விளக்கியுள்ளது. ஆண்பனை, மக்கள் உண்ணுதற்குரிய காயையோ பழத்தையோ தருவதில்லை. அதுவும் இடுகாட்டுள் நிற்குமாயின், அதனை அணுகுவோர் யார்!

திருவோத்தூரில் சிவனடியார் ஒருவர் சிவபெருமானுக்கும் அவர் அடியார்க்கும் பயன்படவேண்டும் என்று விரும்பிப் பல பனைமரங்களைப் பயிரிட்டமையும், எக்காரணத்தாலோ அவை யெல்லாம் ஆண்பனைகளேயாய்விட, அவர் வருந்தித் திருஞான சம்பந்தர் ஆங்கு எழுந்தருளிய காலத்தில் அவரை வணங்கி

விண்ணப்பித்துக்கொள்ள, அவர் தமது திருப்பதிகத்தால் ஆண் பனைகளைப் பெண்பனைகளாகச் செய்தமையும் பெரிய புராணத்தால் நன்கறியப்படுகின்றன. 'பனைமரமே பனைமரமே ஏன் வளர்ந்தாய் பனைமரமே' என்று கேட்க, 'நான் வளர்ந்த காரணத்தை நாட்டாரே சொல்கிறேன்' என்று தொடங்கிப் பனைமரம் பயன்படு விதத்தை எல்லாம் விரித்துக் கூறுகின்ற நாட்டுப்பாடல் ஒன்று மக்களிடையே வழங்கிவருதல் வெளிப்படை. இவற்றால் எல்லாம் பனைமரம் பயனுடைய மரமாதலும், அதனுள்ளும் பெண்பனை சிறந்ததாதலும் விளங்கும். பெண்பனை சிறப்புடையது எனவே, 'பனை' எனப் பொதுப்படக் கூறின் அது பெண்பனையையே குறிப்பதாகும். இங்ஙனம் திருமூலர் ஒரு நான்கு பனை மரங்களைக் குறிக்கின்றார்.

நாலடிச் செய்யுளில், 'நடுவூருள் நிற்கும் படுபனை' என்றது போலவே திருமூலரும், ஊர்நடுவில் நிற்கும் பனைமரத்தையே குறிக்கின்றார். அதுவும், ஒன்றல்ல; இரண்டல்ல; 'நான்கு பனைமரங்கள்; நல்ல பனை மரங்கள்' என்கின்றார். 'நடு ஊர்' என்றால், முச்சந்தி, நாற்சந்தி கூடும் இடம் அன்று; ஆறு தெருக்கள் ஒன்றுகூடும் இடத்தில் அவை நிற்கின்றனவாம். பனைமரம் தரும் பயன்களில், பதநீர் எனப்படுகின்ற பனஞ்சாறு ஒன்று. இஃது இனிமையையும், குளிர்ச்சியையும் உடையதாய்ப் பசியைத் தணித்து, உடல் நலத்தையும் தரும். பாகும், கட்டியுமாக்கிப் பயன்படுத்திக் கொள்ளுதற்கும் உரியது. இத்தகைய சாற்றைச் சில பனைகள் சிறிதாகவே தரும். சில பனைகள் மிகுதியாகத்தரும். திருமூலர் குறிப்பிடும் பனைமரங்கள் மிகுதியான சாற்றைத் தருமாம்.

பனைமரத்தில் உள்ள சாற்றைப் பெறுதற்கு அதன்மேல் ஏறுதல் வேண்டும்; அதுவும் ஏணிசார்த்தி ஏறுதல் வேண்டும். இந்தப் பனைமரங்களில் சார்த்தப்படும் ஏணி ஏறுதற்கரிய ஏணியாம். அந்த ஏணியில் காலைவைத்து ஏறி இப்பனைகளின் உச்சியை அடைந்தால் ஏழு கடலும் நன்றாகத் தெரியுமாம். எனவே உலகம் முழுதும் தெரியும் என்றதாயிற்று. அவ்வளவு உயர்ந்தவை அந்தப் பனைமரங்கள். ஏழுகடலையும் கண்டு, இனிய சாற்றையும் பருகக்கூடிய பாக்கியம் அந்தப் பனைமரத்தில் ஏறினவர்க்கு உண்டு. ஆனால் அவற்றில் ஏறுகின்றவர்கள் யார்? திருமூலர் தாம் ஏறி நின்று இதனைக் கூறுகின்றார்.

அந்த நான்கு பனைமரங்கள் எவை? சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குமே. அவற்றில் ஏறுதற்குரிய ஏணி, அருட்சத்தி பதிவாகிய சத்திநிபாதம், அது கிடைத்தற்கரியது. பல பிறப்புக்களில் தம்மை அறியாது நிகழ்ந்த சிவபுண்ணியங்களின் பயனாக அது கிடைக்கும். 'நான்கு பனைமரம்' என அவை அனைத்தையும் பொதுவாகக் கூறினும், ஒன்றைவிட ஒன்று உயரமும், மிகுந்த சாற்றைத் தருவது என்பதும், அவைகளுள் நான்காவதாகிய ஞானம் என்னும் பனையே மிக உயர்ந்ததாகலின் அதன் உச்சியிலே நின்றால்தான் ஏழுகடல்களும் தெரிவதும், மிகுந்த சாற்றைப் பருகுதலும் கூடும் என்பதும் குறிப்பினால் அறியக் கிடக்கின்றன. ஏழுகடல்களாவன, எழுவகைப் பிறப்புக்கள். ஞானத்தில் உச்சியில் சென்றோர்க்குப் பிறவிப் பெருங்கடல் மிகவும் தூரமாய்க் கீழ்ப்பட்டுப்போகும். உலகத்தின் இயல்பெல்லாம் நன்கு விளங்கும். மிகுந்த சாறு சிவானந்தம். அதனை நுகர்ந்து இன்புறுதல் மிக்க ஞானத்தினாலே விளைவதாம். இதனைப் பெறுபவர் யாவர்? இதற்குரிய தவம் யாருக்கு உண்டு? அரிதினும் அரிதே. ஆயினும், பெறவே முடியாதோ எனின், அவ்வாறில்லை; யாவரும் பெறக்கூடிய பயனே அது என்பதற்கு அப்பனைமரங்கள் ஆறு தெருக்கள் கூடும் அகன்ற சந்தியில்தான் இருக்கின்றன என்கிறார். ஆறு தெருக்கள் எவை? ஆறு அத்துவாக்கள். அவை இந்த உலகமும், உடம்புமே. ஆறு அத்துவாக்களாவன, மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்பன. இவைகளுள் முன் மூன்றும் சொல்; பின் மூன்றும் பொருள். இவற்றின் நடுவிலேதான் சரியை முதலியவற்றை நாம் அணுகவேண்டும். அணுகும் விருப்பம் உண்டாயின் அவற்றைப் பெறலாம். அதுபற்றி அக்கருத்தை வெளியிடும் திருமந்திரத்தைக் காண்போம்.

ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறு படுவன நான்கு பனையுள;
ஏறற் கரியதோர் ஏணியிட்டு அப்பனை
ஏறலுற்றேன்; கடல் ஏழுகண் டேனே.

திருப்பணியே அறப்பணி

ஸ்ரீ சனீஸ்வர பகவான் எழுந்தருளியிருக்கும்

திருநள்ளாறு

ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரசுவாமி ஆலயத்

திருப்பணி வேண்டுகோள்

போகமார்த்த பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

பழம் பெருமை வாய்ந்ததும், சப்த விடங்கத் தலங்களில் ஒன்றாயுள்ளதும், சமயகுரவர்களால் பாடப்பெற்றதும், நளன் கலி நீங்கி முத்தியடைந்ததுமான புண்ணிய பூமியாம் திருநள்ளாறு, புகழ் பெற்ற க்ஷேத்திரமாய் விளங்கி வருகிறது. ஆங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சனீஸ்வரபகவானை நாள்தோறும் வணங்கியும், முப்பது திங்களுக்கொருமுறை நிகழும் சனிப்பெயர்ச்சியின்போது பலகோடி மக்கள் தரிசித்தும் பகவானின் அருள் பெற்றுய்கின்றார்கள்.

பகவான் எழுந்தருளியுள்ள ஸ்ரீ போகமார்த்தபூண்முலை நாயகி சமேத ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி ஆலயத்தை அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திருப்பணி செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது. அதன் மொத்த செலவு சுமார் ஐந்து லட்ச ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வரிய திருப்பணிக்கு பக்தர்கள் அனைவரும் பொருளுதவி புரிந்து புண்ணியம் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம். அங்ஙனம் அறப்பணிகளில் ஒன்றை முழுதும் ஏற்றுக்கொள்ளும் அன்பர்களின் திருப்பெயர் கல்லில் பொறிக்கப்பட்டு ஆலயத்தில் பதிக்கப்பெறும்.

" அண்ணலார் திருப்பணிக்கு அரும் பொருள்
கொடுத்தோர்க் கெல்லாம்
புண்ணியம் கொடுக்கும் போக மார்த்த
பூண்முலையாள் அன்றே "

இங்ஙனம்,

தேவஸ்தான நிர்வாகக் குழுவினர்.

குறிப்பு :- திருப்பணிக்கு நன்கொடை செலுத்த விரும்பும் அன்பர்கள் M. O. அல்லது Cheque மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும். ஆலயத்திற்கு விஜயம் செய்யும் அன்பர்களுக்காகக் குறைந்த கட்டணத்தில் நவீன வசதிகளுடன் ஒரு சுற்றுலா மாளிகை ஆலயத்திற்கருகில் அமைக்கப்பட்டிருக்கிறது.

முகவரி :- திருநள்ளாறு தேவஸ்தான பொருளாளர், கவர்ன்மெண்ட் டிரஷரி, காரைக்கால். (புதுவை இராஜ்யம்)

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A . B. L., அவர்கள்,
" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி ஆலயத்
திருப்பணித் தொடக்க விழாவில் (1—9—67)

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

வழங்கிய

ஆசியுரை

திருநள்ளாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புடையது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தேவாரப் பாடல்களை உடையது. புறச் சமய இருள் போக்கி நம் சைவ சமயத்தை இந்நாட்டில் நிலை பெறச் செய்ய மதுரையில் ஞானசம்பந்தரால் அனலிடை யிடப் பட்டும் வேகாதிருந்த பச்சைத் திருப்பதிகம் இத் தலத் திருப் பதிகமாகும். ஞானசம்பந்தர் அடியார் குழாத்தொடு தங்கித் தொண்டு செய்த தலங்களில் இதுவும் ஒன்று. சப்த விடங்கத் தலங்களில் ஒன்றாக இத் தலம் விளங்கி வருகிறது.

நிடதநாட்டு மன்னனாகிய நளன் சனிபகவானால் பற்றப் பட்டு நாடு நகரம் இழந்து, மனைவி மக்களைப் பிரிந்து, நாரத முனிவர் உபதேசப்படி தீர்த்த யாத்திரை செய்து வருங்கால் திருக்கோகரணத்தில் பாரத்துவாச முனிவரால் இத்தலத்தின் பெருமையைக் கேள்வியுற்று இத்தலத்திற்குவந்து தீர்த்தமாடித் திருக்கோயிலுக்குள் சென்றான். கோயில் நுழைவாயிலை அடைந்தபோது, அதுவரை அவனைப் பற்றியிருந்த சனீஸ்வர பகவான் விலகினார். நளனும் இத்தலத்து இறைவன் பெரு மையை அறிந்து மகிழ்ந்து இத்தலத்திற்கு வந்து பெருமானை வழிபடுவோர் கிரஹதோஷங்களிலிருந்து நீங்கப் பெறுமாறு அருளவேண்டிக்கொண்டான். அன்று முதல் சனிபகவான் இத் தலத்திற்கு வந்து வழிபடுவோரைப் பற்றியிருக்கும் ஏவல், வைப்பு, கிரஹதோஷம் இவைகளிலிருந்து துன்ப நிவர்த்தி செய்தருளுகின்றார்.

நவக்கிரகத் தலங்களில் சனிபகவானுக்கு உரிய தலமாக விளங்குவதால் நாள்தோறும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் எண்ணற்றோர் வந்து தரிசித்து இன்புற்று வருகின்றனர்.

சனிபகவான் ஒரு ராசியிலிருந்து மற்ெருரு ராசிக்குச் செல்லும் சனிப்பெயர்ச்சிக் காலங்களிலும் பல லக்ஷக்கணக்கான மக்கள் நளதீர்த்தத்தில் எண்ணெய் முழுக்காடி திலதீபமிட்டு வழிபடு கின்றனர். கலிங்காதிபதி, உருசிராசன் முதலியோர் இத்தலத்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றுள்ளனர்.

"வளங் கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன் கெழுவி நாளும் வழிபாடுசெய் நள்ளாறே"

என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு. "நள்ளாற்றுனை நான் அடியேன் நினைக்கப்பெற் றுய்ந்தவாறே", "நள்ளாறு என நயவினை நாசமே" என்பது அப்பர் திருவாக்குகள். சுந்தரர் தமமை இறைவன் திருவெண்ணெய்நல்லூரில் தடுத்தாட் கொண்ட நிகழ்ச்சியை நினைந்து, "வெண்ணெய் நலலூரில் அற்புதப்பழ ஆவணங்காட்டி அடியனுயெனை ஆளதுகொண்ட நற்பதத்தை, நள்ளாறனை, அமுதை, நாயினேன் மறந்து என் நினைக்கேனே" என்று இத்தலத்துப்பதிகத்துள் குறிப்பிடுகிருர்.

அஷ்டதிக்பாலகர்களும் பிரமன் முதலானோரும் அமைத்த பதினொன்கு தீர்த்தங்கள் இவ்வூரில் உள்ளன. நளன் பொருட்டு இறைவன் கங்கையை இங்கு வருவித்தருளினன். அது நள தீர்த்தமென வழங்கப்படுகிறது.

இறைவன் - தர்ப்பாரண்யேசுவரர்; அம்பிகை - போக மார்த்த பூண்முலையாள். தியாகேசர் - நகவிடங்கர். இவ்வாறு பலவகையாலும் சிறப்புற்று விளங்கும் இத்திருத்தலத்தை அன்பர்கள் வந்து தரிசித்தல் இன்றியமையாதது.

திருக்கோயில்கள் சிவாகம விதிப்படி நன்கு பரிபாலிக்கப் பட்டால்தான் நாடு நலம்பெறும். மக்கள் நல்வாழ்வு வாழ லாம். பன்னிரண்டாண்டுகளுக்கு ஒரு முறையாவது அஷ்ட பந்தனம் சார்த்தி மகாகும்பாபிஷேகம் செய்தால்தான் திருக் கோயில்கள் விளக்கம்பெறும் என்பது சிவாகமக் கருத்து.

இத்தலத்தின் திருக்கோயில் மிகப்பழமையானதாய் உள் ளது. இக்கோயிலுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்று ஏறத்தாழ 25 ஆண்டுகள் ஆகின்றன. இதனை உளங்கொண்டு இத்திருக்கோயிலை மீண்டும் புதுப்பித்து வேண்டும் திருப்பணி கள் செய்வித்து, மகா கும்பாபிஷேகம் நிகழ்வித்தல் தமிழ் மக்களின் தலையாய கடமைகளிலொன்ருகும்.

இவ்வாலயம் நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து வழிபடுமிடமாக விளங்குகிறது. அகில இந்தியப் புகழ் பெற்ற திருக்கோயில்களில் ஒன்றென விளங்கும் இத் திருக்கோயிலை மிகச் செம்மையான முறையில் திருப்பணி செய்து மகாகும்பாபிஷேகம் செய்விக்க ஆலய நிர்வாகக்குழுவினர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டுள்ளார்கள். அவர்களுடைய முயற்சி வெற்றிபெற அன்பர்கள் பலரும் இத் திருப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இம் மகா கும்பாபிஷேகத் திருப்பணி பொது மக்கள் பலராலும் செய்விக்கப்படல் வேண்டும். ஒவ்வொருவரும் ஈடுபட்டு இறைவன் திருவருளுக்குரியராதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. சனீஸ்வர பகவானுக்கு நடைபெற்றுவரும் கோடியர்ச்சனைப் பூர்த்தி விழாவை அடுத்து திருவருளால் இம் மகாகும்பாபிஷேகத் திருப்பணியும் தொடங்கியுள்ளது.

" அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழு மில "

என்பது வள்ளுவர் வாக்கு. இன்பம் அடைதல் வேண்டும். அவ்வின்பம் அறம்செய்து அதனுல் விளைதல் வேண்டும். அறத்தொடு படாத-அறத்தொடு கலவாத—அறத்தால் வராத இன்பம் புறக்கணிக்கத் தக்கது; புகழும் வாராது; என்பது திருவள்ளுவர் திருவுள்ளம். ஆதலால் எல்லாம்வல்ல திருவருளால் நமக்குக் கிடைத்த செல்வத்தில் இச்சிவபுண்ணியப் பணிக்கு ஓரளவாவது உரியதாகச் செய்தற்கும் அதனுன் இன்பம் அடைதற்கும் இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இத்திருக்கோயில் திருப்பணிக்கு ஐந்து லக்ஷ ரூபாய் செலவாகும் எனத் திட்டமிடப்பட்டிருக்கிறது. எனவே அன்பர்கள் பலரும் பொருள் அளித்து உதவி நின்றுல்தான் விரைவில் திருபபணிகள் முடிந்து மகாகும்பாபிஷேகமும் நிறைவுறும். திருவருள் நலம் வேண்டி நாம் இறைவற்குக் காணிக்கையாக்குப ஒவ்வொரு பொருளும் ஒன்றுக்குப்பதின் மடங்காகப் பெருகும் என்பது உறுதி எனவே இந்தச் சிவபுண்ணியத் திருப்பணியில எல்லோரும் பங்குகொண்டு மகாகும்பாபிஷேக விழா, விரைவில. சிறந்தமுறையில் நடைபெற எல்லா வகையாலும் ஈடுபட்டு நள்ளாறன் திருவருளுக்கு இலக்காகி எல்லா நலன்களுடன் இம்மை மறுமைப் பேறுகளும் இனிது பெற்று வாழ்வார்களாக.

சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 26, இதழ் 8, பக்கம் 428 இன் தொடர்ச்சி)

1. சூக்குமை வாக்கு

ஆசிரியர் : நால்வகை வாக்குக்களில் சுத்த மாயையின் முதல்விருத்தியாய் முதற்கண் நிற்பது சூக்குமை வாக்கு (நுண் மொழி). இதற்கும், இதன் காரண நிலைக்கும் வேறுபாடு மிகுதி யாக இல்லை. காரண நிலையில் உள்ள சுத்தமாயை ஏனை மூவகை வாக்குகளாய் விருத்திப்படுதற்குத் தகுதிபெற்று நிற்கும் நிலையே சூக்குமை வாக்காகும். இதுவே 'நாதம்' என்றும் சொல்லப்படுகின்றது. 'பரை' என்றும் சொல்வது உண்டு.

2. பைசந்தி வாக்கு

சுத்த மாயையின் முதல் விருத்தியாகிய சூக்குமை வாக்கு, பின் மேலும் விருத்திப்பட்டு, 'பைசந்தி' வாக்காகும். அஃதா வது, சொல்வடிவம் சிறப்புவகையில் விளங்காது பொது வகையில் விளங்கிநிற்கும் நிலை. 'பைசந்தி' என்பதற்கு, 'விளங்குவது' என்பது பொருள். சூக்குமை வாக்குப்போல அறவே விளங்காது நிற்றல் இன்றி, ஒருவாறு விளங்கி நிற்ப தால், இதற்கு 'பைசந்தி' என்பது பெயராயிற்று. விளங்கியும் விளங்காதும் நிற்பதற்கு, 'மயில் முட்டையின் நீர்போல' என்று உவமை கூறுவர். மயில் முட்டையில் உள்ள நீரில், மயிலினிடத் துள்ள ஐவகை நிறங்களும் தோன்றியும், தோன்றாதும் நிற்கும். 'சூக்குமை, பைசந்தி' என்னும் இருவகை வாக்கிலும் மொழி வேறு பாடு இல்லை.

3. மத்திமை வாக்கு

சுத்த மாயையின் இரண்டாம் விருத்தியாய் விளங்கியும், விளங்காதும் நிற்கும் பைசந்திவாக்கு, பின். சொல்வடிவில் இனிது விளங்கித் தோன்ற அதனை அவ்வாறே சொல்ல

எழும் முயற்சியைப் பெற்று, ‘ உதானன் ’ என்னும் காற்ருேடே கூடிக் கண்டத் தானத்தில் மெல்ல முழங்குவது மத்திமை வாக்காகும்.

4. வைகரிவாக்கு

சுத்தமாயையின் மூன்ரும் விருத்தியாய் மேற்கூறியவாறு கண்டத் தானத்தில் ‘ உதானன் ’ என்னும் காற்ருேடு மட்டும் மெல்ல முழங்கிய சொல், பின் தன் செவிக்கும், பிறர் செவிக்கும் கேட்கும் வகையில், ‘ பிராணன் ’ என்னும் காற்ருேடு கூடி, ‘ பல் இதழ், நா, அண்ணம், மூக்கு ’ என்னும் உறுப்புக்களின் தொழிற்பாடுகளால் வேறுவேறு வகையாய் அமையும் எழுத்துக்களின் தோற்றக் கேடுகளுடனே கூடச் சொல்லப்படும் வைகரிவாக்காகும், வைகரி-விகாரம் உடையது. விகாரம் - எழுத்துக்களின் தோற்றக்கேடுகள். ‘ மத்திமை, வைகரி ’ என்னும் இருவகைவாக்கும் மொழிவேறுபாடுகளை உடையன. இங்ஙனம் சுத்தமாயை ஒன்றே நால்வகை வாக்குக்களாய் விருத்திபட்டு நிற்கும் என்க.

நால்வகை வாக்குக்களில் ஒன்றேனும் இல்லாது பொருளைப் பற்றிய திட்டமான உணர்வு (சவிகற்பஞானம்) எத்தகையோர்க்கும் உண்டாதல் இல்லை. வாக்குக்கள் இன்றி நேரே பொருள்களை உணரும் ஆற்றல் யார்க்கேனும் என்ருவது உளதாகுமாயின், அவர் அன்றே பாசத்தின் நீங்கிய முத்தராவார். எனவே, ‘ விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் ’ என்னும் மூவகைப்பட்ட ஆன்மவர்க்கத்தினர்க்கும் பொருளைப்பற்றிய சிறப்புணர்வு, வாக்குக்களாலே உளதாம் என்பது நன்கறியப்படும்.

“ மூவகை அணுக்க ளுக்கும்
முறைமையான் விந்து ஞானம்
மேவின தில்லை யாகில்
விளங்கிய ஞானம் இன்ரும் ”

என்றும்,

“ ஓவிட விந்து ஞானம்
உதிப்பதோர் ஞானம் உண்டேல்,
சேவுயர் கொடியி னுன்றன்
சேவடி சேர லாமே ”

என்றும் சிவஞானசித்தி கூறும். இவ்வாற்ருல், 'உயிர்களைப் பிணித்திருக்கும் பலவகைப் பிணிப்புக்களில் வாக்குக்களே நீக்குதற்கரிய பெரும்பிணிப்பாகும்' என்பதும், 'இப் பிணிப்பு அறின், ஏனைப் பிணிப்புக்கள் பலவும் தாமே நீங்க, வீட்டுநிலை கைவரும்' என்பதும் விளங்கும்.

சிவ தத்துவம்

மாணுக்கர் : 'சொற்பிரபஞ்சம்' எனப்படும் நால்வகை வாக்குக்களைப் பற்றிக் கூறினீர்கள்; பொருட்பிரபஞ்சங்களில் சுத்த மாயையில் தோன்றுவன யாவை? அவற்றை அருளிச் செய்தல் வேண்டும்.

ஆசிரியர் : சுத்தமாயையில் தோன்றும் பொருட்பிரபஞ்சங்கள், ஐந்து சிவதத்துவங்களாம். அவை, 'சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை' என்பன. இவை உலகத்தைத் தொழிற்படுத்தக் கருதும் இறைவனுக்கு அந்நிலையில் இடமாய் நிற்பன வன்றி, வினைவயத்தாற் பிறந்து இறக்கும் உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களாய் வந்து பொருந்தா.

1. சிவம்

உலகத்தைத் தொழிற்படுத்தக் கருதுங்கால் இறைவனுக்கு அவனது, இச்சை, ஞானம், கிரியை (விழைவு, அறிவு, செயல்) என்னும் மூன்று சத்திகளுள் இச்சை எஞ்ஞான்றும் ஒரு நிலையிலே நிற்கும். ஏனை ஞானமும், கிரியையும் தனித்தும், ஒன்றின் ஒன்று மிகுந்தும் குறைந்தும், சமமாய் நின்றும் தொழிற்படும். அவ்விடத்து இறைவன் முதற்கண் ஞானசத்தி ஒன்றனே சுத்த மாயையைப் பொறுமையில் நோக்கி 'சிவன்' எனப் பெயர் பெற்று நிற்பன். அவனுல் நோக்கப்பட்ட அந்நிலையில் சுத்த மாயை முதல் விருத்தியாய் அவனுக்கு இடமாகும். ஆகவே, சிவனுக்கு இடமாதல் பற்றி, அம்முதல் விருத்தியே 'சிவம்' என்னும் பெயருடைய தத்துவமாய் நிற்கும். முன்சொல்லிய நால்வகை வாக்குக்களில் சூக்குமை வாக்காகிய நாதத்திற்குப் பற்றுக்கோடாதல் பற்றி, இத்தத்துவம் 'நாதம்' என்னும் பெயரையும் பெற்று நிற்கும்.

2. சத்தி

முதற்கண் ஞானசத்தியால் சுத்த மாயையைப் பொதுமையில் நோக்கிய இறைவன், கிரியா சத்தி ஒன்றனே சுத்த

மாயையைக் காரியப்படுத்தப் பொதுவகையில் சங்கற்பித்து, 'சத்தி' எனப் பெயர் பெற்று நிற்பன். அந்நிலையில் அச் சுத்த மாயை இரண்டாம் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாகும். சத்திக்கு இடமாதல் பற்றி அவ்விரண்டாம் விருத்தியே 'சத்தி' என்னும் பெயருடைய தத்துவமாய் நிற்கும். இது நால்வகை வாக்குக்களில் பைசந்தி வாக்கிற்குப் பற்றுக்கோடாகும். பைசந்தி 'விந்து' எனவும் பெயர் பெறும். ஆதலால், இத்தத்துவமும், 'விந்து' எனப் பெயர்பெற்று நிற்கும்.

3. சதாசிவம்

ஞானசத்தியால் பொதுமையில் நோக்கி, கிரியாசத்தியால் பொதுமையில் சங்கற்பித்த இறைவன், பின் அவ்விரண்டினாலும் சுத்த மாயையைச் சிறப்பு வகையால் நோக்கிச் சிறப்பு வகையால் சங்கற்பித்து ஞானசத்தியும், கிரியா சத்தியும் சமமாய்த் தொழிற்பட,' சதாசிவன் ' எனப் பெயர்பெற்று நிற்பன். அந்நிலையில் அச் சுத்தமாயை மூன்றும் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாகும். சதாசிவனுக்கு இடமாதல்பற்றி அம்மூன்றும் விருத்தி, 'சதாசிவம்' என்னும் பெயருடைய தத்துவமாய் நிற்கும். நால்வகை வாக்குக்களில் இது மத்திமை வாக்கிற்குப் பற்றுக்கோடாகும். ஆகவே இறைவன் வேதாகமங்களைச் சொல் வடிவில் தோற்றுவிக்கும் நிலை இதுவேயாகும். இத் தத்துவம், 'சாதாக்கியம்' என்றும் சொல்லப்படும்.

4. ஈசுரம்

ஞானசத்தி, கிரியாசத்தி இரண்டையும் சமமாகத் தொழிற்படுத்திச் சுத்தமாயையைச் சிறப்பு வகையால் நோக்கியும், சிறப்பு வகையால் சங்கற்பித்தும் நின்ற இறைவன், பின் ஞான சத்தியை மிகச் செலுத்தாது கிரியா சத்தியை மிகச் செலுத்திச் சுத்த மாயையைச் சூக்குமமாகக் காரியபடுத்தி 'ஈசுரன்' எனப் பெயர்பெற்று நிற்பன். அந்நிலையில் அச் சுத்தமாயை நான்காம் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாகும். ஆகவே, ஈசுரனுக்கு இடமாதல் பற்றி அந்நான்காம் விருத்தியே, 'ஈசுரம்' என்னும் பெயருடைய தத்துவமாய் நிற்கும். இந்நிலையில் நிற்கும் இறைவன் 'மகேசுரன்' என்றும், இத்தத்துவம் 'மகேசுவர தத்துவம்' என்றும் சொல்லப்படுதலும் உண்டு. இது, நால்வகை வாக்குக்களில் வைகரி சூக்குமாய் நிற்கும் நிலைக்குப் பற்றுக்கோடாம். சூக்கும வைகரி வாக்கு தன் செவிக்கு மட்டும் கேட்பதாகும். ஆகவே, இத்தத்துவமே, மந்திரங்கட்குச் சிறப்பிடமாகும்.

5. சுத்த வித்தை

கிரியாசத்தியை மிகச் செலுத்திச் சுத்த மாயையைச் சூக்கும மாய்க் காரியப்படச்செய்த இறைவன். பின் ஞானசத்தியை மிகச் செலுத்தி அதனைத் தூலமாய்க் காரியப்படச் செய்து 'வித்தியே சுரன்' எனப் பெயர்பெற்று நிற்பன். அந்நிலையில் அச்சுத்தமாயை ஐந்தாம் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாகும். ஆகவே, 'வித்தியேசுரன்' என்னும் இறைவனுக்கு இடமாதல் பற்றி அந்நான்காம் விருத்தியே, 'வித்தை' என்னும் பெயருடைய தத்துவமாய் நிற்கும். அசுத்த மாயையில் தோன்றும், 'வித்தை' என்பதும் உளதாகலின். அதனினின்றும் வேறுபடுத்தற்கு இது. 'சுத்தவித்தை' என்று சொல்லப்படும். இது, நால்வகை வாக்குக் களில் தூலமாய் நிற்கும் வைகரி வாக்கிற்குப் பற்றுக் கோடா கும். தூல வைகரிவாக்கு, பிறர் செவிக்குக் கேட்பதாகும். ஆகவே, வேதாகமங்கள் பலரிடத்தும் சென்று விளங்குதல் இத் தத்துவம் நிலைக்களமாகவேயாம்.

சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் இத் தத்துவம் ஐந்தும் சிவனுக்கே இடமாதல்பற்றி, 'சிவதத்துவம்' என்றும், சுத்த மாயையின் காரியமாய்ச் சுத்தமாய் இருத்தல் பற்றி, 'சுத்ததத்துவம்' என்றும் சொல்லப்படும். இறைவன் உலகத்தை நோக்கி நிற்கும் நிலை; 'தடத்தம்' என்று சொல்லப் படும் என்பது முன்பே சொல்லப்பட்டமையால், சிவன், சத்தி, சதாசிவன், மகேசுவரன், வித்தியேசுவரன் என்னும் பெயர் களுடன் மேற்கூறிய சிவம், சத்தி முதலிய தத்துவங்களில் நிற் பவன் 'தடத்தசிவன்' எனப்படுவன். சிவன் முதலிய ஐந்து நிலைகளில், 'சிவன் சத்தி' என்னும் இருநிலைகளில் இறைவன் அருவமாய் இருப்பன். 'சதாசிவன்' என்னும் நிலையில் அரு வுருவமாய் இருப்பன். 'மகேசுவரன், வித்தியேசுரன்' என்னும் நிலைகளில் உருவமாய் இருப்பன். அதனால், உமாமகேசுவரர், சோமாஸ்கந்தர், கலியாணசுந்தரர், பிட்சாடனர் முதலிய உருவத்திருமேனிகள் எல்லாம் 'மாகேசுர மூர்த்தங்கள்' எனப் படுகின்றன.

'சிவம், சத்தி' என்னும் அருவநிலை ஒடுக்கநிலை ஆகை யால் அவை, 'இலய நிலை' எனப்படும். லயம்-ஒடுக்கம். சதா சிவனாகிய அருவுருவநிலை ஒன்றும் ஐந்தொழிலில் புதம்நிலை ஆதலால் அது, 'போகநிலை' எனப்படும். 'மாகேசுவரன், என்னும் உருவநிலை இரண்டும் ஐந்தொழிலை நடாத்தும் நிலை ஆகையால் அது, 'அதிகாரநிலை' எனப்படும். இவ்வாற்றால்,

'இலய சிவன், போக சிவன், அதிகார சிவன்' எனத் தடத்த சிவனது நிலை மூன்றாதல் அறியப்படும். அதனால் சுத்த தத்துவங்களும், 'இலய தத்துவம், போக தத்துவம், அதிகார தத்துவம், என மூவகையினவாம் என்பது விளங்கும்.

இச் சுத்த தத்துவங்கள் இங்ஙனம் தடத்த சிவனுக்கு இடமாதலோடு, அத் தத்துவங்களில் நிற்கும் ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களையும் தந்து நிற்கும். சுத்த மாயையின் காரியமாகிய சுத்த தத்துவத்தில் இருத்தற்குரிய உயிர்கள் ஆணவமாகிய ஒருமலத்தையே உடைய உயிர்களாம். ஒருமலம் உடையோர் 'விஞ்ஞானகலர்' எனப்படுவர் என்பது முன்னே சொல்லப்பட்டது. எனவே, இவ்விஞ்ஞானகலர்க்குத் தனு கரண புவன போகங்களைத் தருவன சுத்த தத்துவங்களே யாதல் அறிக.

இனி இங்ஙனம் இயல்பாகவே ஒருமலம் உடையவராய் நில்லாது, இருமலம் உடைய பிரளயாகலராயும், மும்மலம் உடைய சகலராயும் உள்ளோரிலும் இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் வரப்பெற்றுச் சிவஞானத்தை இறைவன் முன்னின்றும், படர்க்கையில் நின்றும் அருளப்பெற்று மலம் நீங்கி மலவாசனை மட்டும் உடையவராய் இருப்போரும் இச் சுத்த தத்துவத்தை அடைவார்கள். அவர்கட்குரிய தனு கரண புவன போகங்களைத் தருவனவும் இச் சுத்த தத்துவங்களே.

மலம் நீங்கினோர் 'முத்தர்' எனப்படுவர். அவருள் மல வாசனையுடையோர் அதிகார மல வாசனை, போகமல வாசனை, இலயமல வாசனை என்பவைகளை உடையவராய் இருப்பர். அதிகாரமலம், போகமலம், இலயமலம் என்பவை ஒன்றைவிட மற்றொன்று சூக்குமமானது. ஆதலின் நீங்கும் பொழுது அவை அம்முறையே நீங்கும். இவருள் அதிகார மலத்துள் தூல அதிகார மலவாசனையுடையோர் இறைவன் வித்தியேசுரனாய் நிற்கும் சுத்த வித்தையை அடைந்து தாமும் வித்தியேசுரர் எனப் பெற்றுச்சுத்தமாயையின்கீழ்உள்ள அசுத்த மாயையைத்தொழிற் படுத்துவர். அவ்வித்தியேசுரர் எண்மர் என்பது சிவாகம நூல் துணிபு. அவர், 'அனந்தர், சூட்சுமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீ கண்டர், சிகண்டி' என்பவராவர். இவர்க்குப் பரிவாரமாய் நிற்பவர் பலர். இவர்க்கெல்லாம் இடமாவது, இச் சுத்த வித்தியாதத்துவம்.

இனிச் சூக்கும அதிகார மல வாசனை உடையோர் இறைவன் மகேசுரன் எனப் பெயர் நிற்கும் ஈசுர தத்துவத்தை அடைந்து

'மந்திர மகேசுரர்' எனப் பெயர்பெற்று நின்று மகேசுர மூர்த்தி ஆணையின்வழி மந்திரம் முதலியவற்றைத் தொழிற்படுத்தி நிற்பர். இவர்க்குப் பரிவாரமாவோரும் பலர். இவர்கட்கெல்லாம் இடமாவது இவ் ஈசுர தத்துவம்.

இனி போகமல வாசனை உடையவராய், சதாசிவமூர்த்தியது சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம் என்பவைகளைப்பெற்று 'அணுசதாசிவர்' என்னும் பெயருடன் சுத்த போகத்தை அனுபவித்திருப்போர் பலர். அவர்கட்கெல்லாம் இடமாவது, இச் சதாசிவ தத்துவமே. இவ்வாறே தூலலயமல வாசனை உடையவர் சத்தி தத்துவத்தையும், சூக்கும லய மல வாசனையுடையவர் சிவ தத்துவத்தையும் அடைந்து அங்குள்ள போகத்தை அனுபவித்திருப்பர். அவர்கட்கு இடமாவன அவ்விரு தத்துவங்களும். ஆகவே, சிவதத்துவம் முதலிய ஐந்து தத்துவங்களிலும் புவனங்கள் உள்ளன என்பது போதரும், அப்புவனங்கள் முறையே பத்து, ஐந்து, ஒன்று, எட்டு, ஒன்பது எனச் சிவாகமங்கள் வரையறுத்துக் கூறும்.

இச்சுத்த தத்துவங்கள் காலதத்துவத்தைக் கடந்து நிற்றல் பற்றி 'நித்தியம்' (தோற்றக் கேடுகள் இல்லாதன) என்று சொல்லப்படும். எனினும், காரியங்கள் யாவும் அநித்தியமே யாகலின், அஃது உபசாரமேயாம். "சுத்த தத்துவம் சிவன்றன் சுதந்திர வடிவமாகும் என்னும் சிவஞானசித்தி முதலியனபற்றி 'சுத்தமாயை இறைவனுக்குத் திருமேனியாம்' என்பர் சிலர். அஃது, அந்நூலுள், "காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால்" என்பது முதலிய பலவற்றோடு முரணுமாகலானும், இறைவனுக்கு அவன் சத்தியன்றிப் பிறிதொன்று வடிவமாகாமையானும் 'அதிட்டானம்' என்பதே வடிவு என உபசரித்துக் கூறப்பட்டதாம். ஆகவே, இத்தத்துவங்கள் இறைவனுக்கு இடமாதலன்றி வடிவம் ஆகா என்றுணர்க. இங்ஙனம் சிவ தத்துவம் ஐந்தையும் இனிதுணர்க.

(தொடரும்)

செய்திகள்

தமிழ்நாடு தெய்விகப் பேரவைக் குழுவினருக்கு சமயப் பிரசார நிலையத்தில் வரவேற்பு

சென்னை, தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 3—9—67 ஞாயிறு மாலை தமிழ்நாடு தெய்விகப் பேரவை சமயப் பிரசாரக் குழுவினருக்கு வரவேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது. "புனிதர் பேரவை, விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே" என்னும் பெரியபுராணப் பாடலை முதலில் சொல்லி ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறி, வரவேற்புப் பத்திரம் ஒன்றும் வாசித்து, தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அனுப்பிய ஆசிச் செய்தியையும் படித்தார்கள். காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் பேரவையின் செயலாளர், திரு. ஏ. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் எல்லோரையும் நாம பஜனை செய்யச் செய்து பேரவை நோக்கம் பற்றி விளக்கம் செய்யும்போது 14 மடாலயங்களின் தலைவர்கள் இப்பேரவையில் அங்கம் வகிக்கிறார்கள். நிகழாண்டில் திருச்சிக்கு அண்மையில் உத்தமர்கோயில் தேவஸ்தான இடத்தில் ரூபாய் இரண்டரை லட்சம் செலவில் மகப்பேறு மருத்துவ இல்லம் கட்டுவதாக இருக்கிறது. மாயூரத்தை அடுத்த மன்னன்பந்தலில் தருமை ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனக்கோயில்களின் இடத்தில் அநாதை இல்லம், ஆகம பாடசாலை, தேவார பாடசாலை முதலியவைகள் அமைக்க ஒரு லட்சம் ரூபாயில் கட்டடம் கட்ட இருக்கிறது என்றும் கூறினார்கள். திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், நமது வாழ்வில் சமய உணர்வு எல்லாத்துறையிலும் பரவி இருப்பதை விளக்கிக் கூறினார்கள். முன்னாள் அறநிலைய அமைச்சர் திரு. கே. வேங்கடசாமி நாயுடு அவர்கள் சைவ, வைணவ மடங்கள் ஒன்று சேர்ந்து இப்பேரவையைத் தொடங்கியிருப்பது போற்றத்தக்கது. அநாதை இல்லம் அமைத்து ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் அவர்களுக்கும்

சமய உணர்வை ஊட்டுவது மிகவும் இன்றியமையாதது என்று பேசினார்கள். முன்னாள் அறநிலைய ஆணையரும் இன்னாள் டிரிபியூனல் கோர்ட் நீதிபதியுமான திரு. எம். எஸ். சாரங்க பாணி முதலியார் அவர்கள் பேசும்போது உண்மையான தெய்வ பக்தியில் ஈடுபடுபவன் சைவ, வைணவ வேற்றுமையைக் காணமாட்டான் என்று விவேகானந்தர் கூறியுள்ளதை நாம் சிந்திக்க வேண்டும், சமய வளர்ச்சிக்குப் பிரசாரத்தைவிட சேவையே முக்கியமானது. திருமடங்களின் தலைவர்களும், ஆலயங்களும், அறநிலைய இலாகாவும் ஒன்று சேர்ந்து பணி யாற்றத் தொடங்கியிருப்பது சமய வளர்ச்சிக்கு அறிகுறி யாகும். தருமம் செய்ய விரும்புவோர் பேரவையின் மூலம் செய்தால் எல்லோருக்கும் பயன் தரும். வாரிசு இல்லாத வர்கள் தமது சொத்துக்களைப் பேரவைக்கு வழங்குதல் பேரறமாகும். இரண்டாண்டுகளாக இப்பேரவைக்குத் தலைமை வகித்து ஆர்வத்துடன் நடத்திவரும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் போற்றுதற்குரிய வர்கள் என்று கூறினார்கள். இந்நாள் அறநிலைய ஆணை யரும், பேரவையின் துணைத்தலைவருமான திரு. ஏ. இராதா கிருஷ்ணன் அவர்கள் நாடு சிறக்க வருங்கால மக்களாகிய மாணவர்கள் சிறக்கவேண்டும். அவர்கள் நல்வழிக்குத் திரும்ப இப்பேரவை எந்த வகையில் வேலை செய்ய இயலும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இந்த ஆண்டில் பட்டதாரிகளுக்கு அறங்கூறும் திருக்குறள் பரிசளித்திருப்பதை எல்லோரும் பாராட்டுகின்றனர். அறநிலைய இலாகாவும், பேரவையும் தம்மாலான நன்மைகளைச் செய்யத் தயாராக இருக்கிறது. மக்கள் ஒத்துழைப்பும் உதவியும் மிகவும் தேவை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் என்றார் கள். அறநிலையத் துணை ஆணையர் திரு. ஏ. சிதம்பரம் அவர் கள், "மனிதனை மனிதத் தன்மையோடும் நாளடைவில் தெய்வத் தன்மையோடும் வாழ வழிவகுப்பதே சமய வாழ்வு" எனப் பிரசார நிலையத்தார் வரவேற்பிதழில் வெளியிட்டிருப்பதைப் பாராட்டுகின்றேன், சமய வாழ்வும் சமூக வாழ்வும் ஒன்றே, வேறாகப் பிரிப்பதால்தான் சமய வாழ்க்கை வேண்டாதது என்று இளைஞர்கள் கருதிவிட நேரிடுகிறது. பேரமைப்பாக விளங்கும் இப் பேரவையின் கிளைச் சங்கங்களில் எல்லோரும் அங்கத்தின ராக சமய சமூகப் பணிக்கு ஆதரவு தர வேண்டும் என்றார்கள். பட்டம் பெற்றோர்கட்குப் பேரவை "திருக்குறள்" பரிசு வழங்கி யதைப் பாராட்டிப் பட்டதாரிகளின் சார்பில் திரு. அ. பாலுருவா யன் பி. ஏ., பாராட்டுப் பாடல்கள் வாசித்தார். திரு. கொத்த

மங்கலம் சுப்பு அவர்கள் சினிமாப் படங்களின் மூலம் சமயம் வளர்ந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார்கள்.

காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் தமது அருளுரையில் மக்கள் அன்றுட வாழ்வில் நல்ல நினைவும், பேச்சும், செயலும் உடையவர்களாகத் திகழ்வதற்கு இறைவழிபாடும், தேவார திருவாசக பாராயணமும் உடையவர்களாதல் வேண்டும். காலையில் எழும்போது திருவாரூரில் இருப்பதாகவும், காண்பன எல்லாம் நடராசர் தரிசனமாகக் காணவும், இரவு படுக்கும்போது காசியில் இருப்பதாகவும் எண்ணுதல் நம்மை உய்விக்கும் என்று அருளினார்கள். நன்றியுரை கூறும்போது ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அன்னிய மதம் இந்திய நாட்டில் பரவ வெளிநாடுகளிலிருந்து பதினொரு கோடி ரூபாய் வருகிறது என்று நியோகி கமிட்டி அறிக்கை கூறுகிறது. உத்தேசமாகப் பார்த்தால் ஆண்டு தோறும் தமிழ் நாட்டிற்கு ஒரு கோடி ரூபாய் கிடைக்கிறது. இத்துடன் இந்நாட்டில் உள்ளோர் தொகையும் சேர்த்தால் அதிகமாகப் பணி செய்ய முடிகிறது. நமக்கு இப்பேரவைக்கு மடாலய தேவாலயங்களின் உதவி மூலம் கிடைக்கும் தொகை ஐந்து லட்சம்தான். இதைக்கொண்டு பெரும் அளவில் பணி செய்வது சிரமம். மக்கள் எல்லோரும் நமது நிலையை உணர்ந்து உதவி செய்ய முன் வரவேண்டும் என்று கூறினார்கள். தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

சென்னை, தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 12—8—67 ஆடிச் சுவாதியன்று ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. 'கலைமகள்' ஆசிரியர், செந்தமிழ்ச் செல்வர், திரு. கி. வா. ஜகந்நாதன் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். பைந்தமிழ்ச்செல்வர், திரு. ச. சிவகுமார் "சுந்தரர் செந்தமிழ்" பற்றி அரிய விரிவுரை ஆற்றினார்கள். தலைவர் தமது தலைமையுரையில் புத்திரமார்க்கத்தை நடத்திக் காட்டிய திருஞானசம்பந்தரின் தேவாரம் கொஞ்சுந் தமிழ் என்றும், தாசமார்க்கத்தை நடத்திக்காட்டிய அப்பர் தேவாரம் கெஞ்சுந் தமிழ் என்றும், தோழர் மார்க்கத்தை நடத்திக் காட்டிய சுந்தரர் தேவாரம் மிஞ்சுந் தமிழ் என்றும் நயம்படப் பேசி சுந்தரர்

தேவாரத்திலிருந்து அறவுரைகள் பல கூறினார்கள். வரவேற்புரையும் நன்றியுரையும் கூறிய வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், சம்பந்தரும், அப்பரும் சைவ சமயத்தை நிலைநாட்டுவதற்கு அவதரித்தவர்கள் என்றும், சுந்தரர் சைவ நாயன்மார்களை உலகிற்கு அறிவிக்கவும், மக்கள் பெரியோரிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளை அறிவிப்பதோடு நடந்து காட்டவும் அவதரித்த சைவர்களின் குலதெய்வம் என்றும் குறிப்பிட்டார்கள். நிலையத் திருமுறை வகுப்பு மாணவியர் கடவுள் வணக்கமாகச் சுந்தரர் தேவாரப் பாடல்களை இசையுடன் ஓதி மகிழ்வித்தனர்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Shiyali.

அடியேனும் எனது மனைவியும் ஸ்ரீ பிரம்மபுரீசுவரர் திருக்கோயிலைத் தரிசிக்க வேண்டுமென்று பலநாள் தவமிருந்த பேரவா இன்று நிறைவேறப்பட்டோம். இம்மாபெரும் திருக்கோயிலின் பழமையையும் பெருமையையும் இன்றுதான் யாம் பூரணமாக உணர அருள்கிட்டியது. இத் திருக்கோயிலில் சிறந்த தூய்மை நிலையை நிலைநிறுத்திவரும் அருட்பெருஞ் செல்வர்கள் அத்தனைபேரும் பாராட்டுக்குறியவர்களாவார்கள். எல்லாம் வல்ல இறைவன் அருளால் சிவநேசச் செல்வர்கள் அத்தனை பேருக்கும் சகல நலன்களும் அருளப் பிரார்த்திக்கின்றேன்.

S. Swamikkannu B. Sc., M. L.
District & Sessions Judge.
16—8—57. East Thanjavur Division at Nagapattinam

விசேஷ நாட்கள்

12—9—67 முதல் 11—10—67 முடிய

12—9—67	குங்குலியக்கலய நாயனார் திருநக்ஷத்திரம்
16—9—67	பிரதோஷம்
21—9—67	உருத்திரபசுபதி நாயனார் திருநக்ஷத்திரம்
24—9—67	கார்த்திகை
25—9—67	திருநாளைப்போவார் நாயனார் திருநக்ஷத்திரம்
1-10—67	பிரதோஷம்
2-10—67	அருணந்தி சிவாசாரியார் திருநக்ஷத்திரம்
4-10—67	நவராத்திரி ஆரம்பம்
11-10—67	ஆயுத பூசை; ஏனாதி நாயனார் திருநக்ஷத்திரம்

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(பிலவங்கஞு புரட்டாசிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—9—67 முதல் 16—10—67 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். நஷ்டமான பொருள்கள் தாஞகை வந்துசேரும். மேலோர் பெரியோர்களின் அன்பும் ஆசியும் கிடைக்கும். சஸ்ய தான்ய விருத்திகள் ஏற்படும். மனம் சந்தோஷம் அடையும் ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் மேலோங்கும். நூதன தொழிலும் ஜீவன சுகமும் ஏற்படச்செய்யும். குடும்பம் தழைக்கும். ரோகணி நான்கு பாதங்களும் மிருகசிர்ஷம் 1, 2 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். இல்லறசுகம் உண்டுபண்ணும். தெய்வபலம் முன்னின்று சகல காரியங்களையும் சாதிக்கும். ஆனலும் அடிக்கடி சபல சித்தமும் ஸ்திரபுத்தி இல்லாமலும் இருந்துகொண்டு இருக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் நன்மையை உண்டுபண்ணும். இல்லறம் ஓங்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். வம்சவிருத்திக்குரிய சுப சூசனங்கள் ஏற்படும். ஆரோக்யம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் விவசாய காரியங்களையும், நூதனமான தொழில் முறைகளையும் விருத்திசெய்து சத்ருக்கள் எல்லோரையும் வசியும்படி செய்யும். தான்யம் விருத்தியாகும்; ஸ்திரி மூலமான தன பிராப்தியும் காரியசித்தியும் ஏற்படும். மனம் சாந்தி அடையும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் நன்மையைத் தராது. பலவிதமான சதிபாதைகளை உண்டுபண்ணும். நஷ்டங்களும் நம்பினவன் மோசம் செய்தலும் அதிகமாகும். மேற்படி ராசிபலனைப் பற்றி அதிகம் விவரிப்பதற்கு இல்லை. ஷை ராசிக்காரர்கள் முக்கியமாக மகம், பூரம் இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருந்துகொண்டு அவரவர்களின் தொழில்களையும் குடும்பத்தையும் ரக்ஷித்துவர கடவுள் காப்பார். மேற்படி ராசிக்காரர்கள் குருவாரம சனிக்கிழமை இரண்டு கிழமையும் விரதம் இருந்துகொண்டு ஸ்ரீபகவானைத் தரிதனம்செய்துகொண்டுவர நன்மை உண்டாகும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். மாத மத்தியில் கொஞ்சம் ஆரோக்கியக் குறைவு காட்டும். அடிக்கடி சஞ்சார பலனும் அதிக விரயங்களும் உண்டுபண்ணும். தெய்வீகத்தன்மை ஓங்கி வெகுகாலமாய் விட்டுப்போன நண்பர்கள் வந்து உபசரிப்பார்கள். கிராம சஸ்ய தான்யவிருத்தி எல்லாம் விசேஷமாக உண்டாகும். திங்கள், புதன் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும்- ஆரோகியம் உண்டுபண்ணும். ஜீவனலாபம் ஏற்படச்செய்யும், நஷ்டமான பொருள்கள் தானாக வந்துசேரும். மத்திய காலங்களில் நண்பர்களாலேயே சில அப்பிரியமான வார்த்தைகள் உண்டாகும். ஆனாலும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் எதிர்பாராமல் கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமேயாகும். விவாகாதி சுபகாரியங்கள் நடைபெறும். நூதன கிரகவாசமும் தொழில் ஏற்றமும் ஏற்படச்செய்யும். குடும்பம் ஓங்கும். நண்பர்களால் பலநன்மைகள் தானாக ஏற்படும். சனி, செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனூர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். ஆரோக்யத்தையும் தனதான்யப் பெருக்கத்தையும் தரும். தொழில் ஓங்கும்.

உலகப் பிரசித்தி உண்டுபண்ணும். தெய்வபலம் முன்னின்று காக்கும். மனம் சந்தோஷம் அடையும். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் மஹோன்னதமான பதவியைத் தரும். மேலோர் பெரியோர்களின் அன்பினாலும், தெய்வ பலத்தாலும் தொழிலும் குடும்பமும் ஓங்கும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். கீர்த்திபத்திரம் கிடைக்கச்செய்யும். ஆரோக்யம் உண்டாகும். (புதன், வியாழன் சுபமாகும்)

11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். சலசித்தமும், குடும்பத்தொல்லைகளும் அதிகமாகும். ஆனாலும் மேலோர் பெரியோர்கள் அன்பும் உதவியும் நீடிக்கச்செய்யும். ஆரோக்கியக் குறைவும் வைத்தியச் செலவுகளும் இருந்து கொண்டே இருக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுகமான வாழ்வைத் தரும். உத்தியோகம் ஓங்கும். சஞ்சார பலன் அதிகமாகும். எதிர்பாராதபடி அதிக செலவினங்களும் ஏற்படச்செய்யும். தெய்வபலம் ஓங்கும். இல்லற சுகத்தை உண்டுபண்ணும், சகலமான பாதைகளும் நிவர்த்தியாகும். தார்மீக செலவினங்கள் ஓங்கி கீர்த்தி பத்திரம் கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :— கனதனவான்களுக்கும் பெரியோர்களுக்கும் தர்மிஷ்டர்களுக்கும் வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்வதாவது, ஈசன் அருளால் மேற்படி மாதமும் அடிக்கடி கண்டவர்ஷங்கள் ஏற்பட்டு சஸ்யவிருத்தி, தான்ய விருத்தி விசேஷமாக ஓங்கும். விலைவாசிகளும் கொஞ்சம் குறைந்து காட்டும். ஆனாலும், துஷ்டர்கள் ஓங்குவார்கள். சாதுக்களையும் தர்மிஷ்டர்களையும் துன்புறச் செய்வார்கள். உலக காரியங்கள் எல்லாம் சரிவர நடத்த முடியாமல் விக்கினம் உண்டாகும். தெய்வபலமானது முன்னின்று துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்குரிய சகலயக்ஞயாகம் அர்ச்சனை முதலான சத்கர்மாக்களின் பலத்தைப் பெரியோர்கள் தேடி வரவேண்டும். கடவுள் முன்னின்று காப்பார். தென்தேசம் செழிக்கும். சுபமுண்டாகும்.